# விளக்கு




மார்ச் — ஏப்றல் 1994

விலை:- 15-00

# விளக்கு

வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்

அகல்: 01 | பவ-பங்- சித்திரை ★ திருவள்ளுவர் ஆண்டு: 2024 ★ ஏப்ரல்-மே 1994 | சுடர்: 05


## கற்றுக்கொண்டே இருப்போம்

கல்விக்கு எல்லை இல்லை; கல்வி கற்றல் நீண்ட தொடர் நிகழ்ச்சி.

புத்தகத்தை விரித்து வைத்து அதிலுள்ளவற்றை நெட்டுருப் பண்ணுதல் என்ற மிகக் குறுகிய கருத்துடன் நில்லாமல் கல்வியை அதன் ஆழ்ந்த விரிந்த பொருளில் நோக்குவோர் அதற்கு எல்லை இல்லை என்ற உண்மையை உணர்ந்துகொள்வர்.

அது பள்ளிக்கூடத்திற்தொடங்குவதுமன்று; பல்கலைக் கழகத்துடன் முடிவதுமன்று.

''படிக்கத் தொடங்கிவிட்டேன்" என உறுதியுடன் கூறும் ஒருவரால் எந்தச்சந்தர்ப்பத்திலும் ''படித்து முடித்து விட்டேன்" எனத்திருப்தியுடன் சொல்லமுடியாது.

வாழ்க்கை முழுவதும் ஒருவன் கற்கவேண்டும்; கற்றுக் கொண்டே இருக்கவேண்டும்; இறக்கும்வரையும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவார் திருவள்ளுவர்.

இந்த உண்மையை வேறு யார் உணராவிட்டாலும் ஆசிரியர்கள் கட்டாயமாக உணர்ந்து கொள்ளவேண்டும். ஏன்? அவர்கள் இயற்றும் பணி, அனைவர்க்கும் - அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்ற, அடிப்படையாக இருக்கின்ற கல்விப்பணி. இந்த உண்மையை உணர்ந்தாற்றான்

பயனுள்ள, பொருத்தமான, நிறைவான கல்வியை மாணவர்க்கு வழங்க அவர்களால் முடியும்.

காலம் கடுகதியிற் சுழல்கின்றது. "இம் மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறு" மெனப்புதிய தகவல்கள், புதிய போக்குகள், புதிய மாற்றங்கள், புதிய திருத்தங்கள், புதிய உத்திகள் - பெருகி வருகின்றன. இந்தப்புதுமைப் புயலால் அடிபட்டுப்போகாமல் நின்று நிதானித்து நல்லவற்றைக் கொள்ளவும் அல்லவற்றைத் தள்ளவும் ஆசிரியர்கள் தவறக்கூடாது.

எல்லாவற்றையும் ஆழ்ந்து ஆராய்வதற்கு ஒவ்வொருவராலும் முடியாது என்பதும் உண்மையே. துறைசார் அறிஞர்களின் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் திட்டமிட்ட வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சஞ்சிகைக் கட்டுரைகள் போன்றவற்றின் துணையுடன் காலத்துக்குக் காலம் ஆசிரியர்கள் தங்களைப் 'புதுப்பித்துக்' கொள்ளலாம்.

"ஆசிரியர்களிடம் கற்றுப்பயனடைவோம்; முன்னேறுவோம்; வாழ்க்கையில் உயர்வோம்" என்ற மாணவர்களின் நம்பிக்கை, பொய்க்காமலிருக்குமாறு பார்த்துக் கொள்வது ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு என்பதை அவர்கள் ஒருபோதும் மறக்கலாகாது.

## சாரணீயத்தில் உயர் பயிற்சி

எந்த வேளையிலும் எந்த விதமான பொது நலப் பணியையுஞ் செய்யத் தயாராக விருக்கும் சாரணர் இயக்கம் தமிழீழத்திலுள்ள கல்லூரிகள் பாடசாலைகள் பலவற்றில் நன்கு வேரூன்றிச் செயற்பட்டு வருவதை எல்லோரும் அறிவர். சாரணர்களின் உயர் நிலையை உறுதிப்படுத்துவதும் சிறப்பான மதிப்புக்குஉரியதுமான தருச்சின்னத்தைப் பெறுவதற்கான பயிற்சி மிரிகம, நுவரெலியா போன்ற இடங்களிலேயே வழங்கப்பட்டுவருகின்றது. நமதுமாநிலத்தை சேர்ந்த சாரணர்கள் இப்படியான இடங்களொன்றிற்பயிற்சி பெற்றே தருச்சின்னத்தைப் பெற்றனர். கடந்த சில ஆண்டுகளில் இச்சின்னத்தைப் பெற்றதமிழர்களின் தொகை மிகவும்குறைவு. சமீப காலமாக இங்கு நிலவிவரும் சூழ்நிலை மேற்படி இடங்களுக்குப் பயணம் செய்வதில் பல வித இடர்களையும் அதிக பணச் செலவையும் ஏற்படுத்திவருவது இதற்கான ஒரு காரணமாகும். நமது மாநிலத்திற் சாரணீயத்தின் எதிர்காலம் சிறப்புற அமைய வேண்டும் மென்றால் தருச் சின்னத்திற்குரிய உயர்பயிற்சி இங்கேயே



வழங்கப்படல் வேண்டும். இந்த உண்மையை உணர்ந்து கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் திரு. மா. புவனேந்திரன், பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் திரு. கோ. செல்வவிநாயகம், யாழ்மாவட்ட உதவி ஆணையா திரு. இ. தவகோபால் ஆகியோர் கூட்டாக விடுத்த கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைத்துள்ளது. கைதடி நவீல்ட் பாடசாலையில் இப் பயிற்சியை நடத்துவதற்குப் பிரதம ஆணையாளர் ஜனாப் எம். எம். மொகிடீன், தேசிய பயிற்சி ஆணையாளர் திரு. டி. எதிரிசிங்கா ஆகியோர் சம்மதித்துள்ளனர். குருளைச் சாரணர்க்குரிய தரு சின்னப் பயிற்சி 10. 8. 94 தொடக்கம் 16. 8. 94 வரையும், சாரணர் தலைவர்க்குரிய தருசின்னப் பயிற்சி 18. 8. 94 தொடக்கம் 26. 8 94 வரையும் நடைபெறும். நமது சாரணர்கள் இவ்வரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்துவர் என நம்புகின்றோம். முழு மனதுடன் இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்ட மூவரையும் பாராட்டுகின்றோம்.

## சேவை நலம்

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் திரு. நா கந்தசாமி, நல்லூர் புனித பெனடிக்ற் றோ. க. வித்தியாசாலை அதிபர் அருட்சகோதரி எம். சைசா ஆகியோர் தம் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளவர்.

விலங்கியல் சிறப்புப் பட்டதாரியான திரு. கோ. செல்வவிநாயகம் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிற் சாரணாசிரியராகக் கடமையாற்றி, அக்கல்லூரிச் சாரணர்கள் தீவடங்கிய விருதுகளைப் பெற வழிசெய்தவர்; பல்லாண்டுகளாக வல்வை சிதம்பராக் கல்லூரியின் அதிபராகவிருந்து இக்கட்டான வேளைகளில் அதனைக் கட்டிக் காத்தவர். வடமராட்சி "லிபரேஷன் ஒப்பரேஷ" னின் போதும் இந்திய இராணுவ நடவடிக்கையின் போதும், கல்லூரி மூடப்படாமலும் அதன் தரம் வீழ்ந்துவிடாமலும் உறுதியுடன் செயற்பட்டவர். தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் தலைவராகப் பணியாற்றிய இவர், "கடலகவளம்" சம்பந்தமான பாடத்திட்டங்களை எழுதியவர், பருத்தித்துறை மாவட்டச் சாரண ஆணையாளரான இவர், தன் ஓய்வுக்காலத்தைச் சாரணீயத் துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிக்க முன்வந்துள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் சிற்பி எனப் புகழ் பெற்ற திரு. ஐ. பி. துரைரத்தினம் அவர்களின் அபிமான மாணவரான திரு. நா. கந்தசாமி, யூனியன் கல்லூரியின் வளர்ச்சி

யுடனும் வரலாற்றுடனும் தன்னை இணைத்துக்கொண்டவர்; கல்லூரியில் உருவாக்கப்பட்ட முதலாவது மாணவர் தலைவர் குழுவில் இடம் பெற்றவர்; கல்லூரியின் விளையாட்டுத்துறை, பௌதிக விஞ்ஞானத் துறை, இந்து சமய வழிபாட்டுத்துறை போன்றவற்றை மேலோங்க வைத்தவர்; நாட்டின் சூழ்நிலையாற் சிறிது காலம் செயலற்றிருந்த கல்லூரித் தமிழ் மன்றம் மீண்டும் துடிப்புடன் செயற்படவும் கையெழுத்துச் சஞ்சிகைகள் பல மலரவும் உந்து சக்தியாக விளங்கியவர். நெருக்கடியான ஒரு காலப்பகுதியில் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்ற இவர், கல்லூரியின் கட்டுக்கோப்புச் சிதைந்துபோகாமல், மருதனார் மடத்தில் அதனை இயங்கச் செய்து, அதை மீண்டும் புதுப் பொலிவு பெறச் செய்தார்.

பல்வேறு வசதியீனங்களால் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த நல்லூர் புனித பெனடிக்ற் றோ. க. வித்தியாசாலையின் அதிபராகப் பத்து ஆண்டுகளின் முன்னர் பதவியேற்று ஏழைப் பிள்ளைகளின் கல்விக் கண்ணைத் திறக்கவேண்டும் என்ற ஆர்வத்தாலும் விடா முயற்சியாலும், அதை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தவர் அருட்சகோதரி எம். லைசா. பட்டங்களும் பதவிகளும் மக்களின் சேவைக்காகவே என்பதை நன்குணர்ந்து செயற்பட்ட இவரின் காலத்தில், கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் இப் பாடசாலை மாணவர்கள் ஈட்டிய சாதனைகள் பல. ஆரம்பக் கல்வி சரியாக ஊட்டப்பட்டாற்றான், உயர்கல்வி சிறப்பாக அமையும் என்பதை நன்குணர்ந்து. ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பூரணமாகப் பெற்றுத் தன் நோக்கத்தில் வெற்றி பெற்றார் சகோதரி லைசா.

இவர்களின் சீரிய பணி, யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்குத் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

---

**அட்டைப்படம்:**

*பொம்மலாட்டத்தில் உபயோகிக்கப்படும் முப்பரிமாண விரற் பொம்மைகள் சில இடம்பெற்றுள்ளன. கிளி, முயல் போன்றவை துணிகளிற் தைக்கப்பட்டு உள்ளே பஞ்சு பொதியப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகளில் இவற்றை உபயோகிக்கும்போது சிறுவர்களின் விரல்களும் வலுப்பெறுகின்றன.*

---

# ஆசிரியம் — வாண்மையும்

*வாண்மை என்ற உயர்ந்த நிலையில் வைத்தெண்ணப்படும் தொழில்கள் எவை? ஆசிரியம் அவற்றுள் ஒன்றா? வாண்மைக்குரிய அடிப்படை அமிசங்கள் எவை? விளக்கம் தருகின்றார் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியர்.*

அ. சந்திரகுமார் B. Sc., Dip - in- Ed.

இன்றைய நவீன உலகில், மக்கள் பல வகையான தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். சிக்கல் நிறைந்த இன்றைய சமூக அமைப்பில், மனிதனொருவனின் சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை என்பவற்றில் அவன் செய்யும் தொழில் பிரதான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மனித நாகரிக வளர்ச்சியினால் புதிய பல தொழிற்துறைகள் உருவாகி வளர்ச்சியடைந்துள்ளன; எண்ணிக்கை அதிகரிப்புடன், அவற்றிடையேயுள்ள பண்பு வேறுபாடுகளும் தெளிவாகக் காணப்படுகின்றன. பல்கிப் பெருகியுள்ள தொழில்களுட் சில வாண்மை (Pr fession) எனச் சிறப்பாகக்குறிப்பிடப்படுகின்றன; வாண்மையினர், சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை என்பவற்றில் மற்றைய தொழிலாளர்களைவிட மேன்மையுடையோராகக் கணிக்கப்படுகின்றனர்.

மத்தியகால ஐரோப்பாவிற் பல்கலைக் கழகங்களின் வளர்ச்சியுடன் வாண்மை என்னும் எண்ணக்கரு உதயமானது, நூல்சார் கல்வியை இப்பல்கலைக் கழகங்கள் வழங்க, தொழிற் கல்வியைத் தொழிற்கூடங்கள் வழங்கின. தொழிற் கூடங்களிற் கற்றுவெளியேறித் தொழில் புரிந்தோர் வாண்மையினர் என அழைக்கப்படவில்லை.

வாண்மைத் தொழில்கள் யாவை? பல்வேறு அறிஞர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையிலே, பின்வரும் பண்

புகளைக்கொண்டுள்ளவை வாண்மைத் தொழில்களாகக் கருதப்படுகின்றன.

1. ஆற்றப்படும் தொழிலானது இலாபமீட்டுதல் என்னும் நோக்குடன் அமையாது சமூகத்திற்குச் சேவையாற்றுதல் என்னும் நோக்கில் அமைந்ததாக இருத்தல்.

2. வாண்மையினரின் நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பும் நெறிப்படுத்தல் ஒழுக்கக் கோவையும் உருவாக்கப்பட்டிருத்தல்.

3. வாண்மைக்குரிய சிறப்பான அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி, நுட்பம் என்பவற்றைப் பெற்றிருத்தல்.

4. வாண்மைக்குரிய சிறப்பார்ந்த அறிவையும், பயிற்சியையும் பெற்றவர்களைத் தவிர்ந்த பிறரால் குறித்த வாண்மையை மேற்கொள்ளாது இருப்பதற்கான சட்டவரையறைகளைக் கொண்டிருத்தல்.

5. வாண்மையினர் தம் செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரத்தையும் சுயகட்டுப்பாட்டையும் பெற்றிருத்தல்.

இவற்றின் அடிப்படையிற் பார்க்கும்போது மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல் போன்றவை வாண்மையாகக் கணிக்கப்படுகின்றன. ஆசிரியத்தின் (Pedagogy) நிலையென்ன? இதை ஓர் வாண்மையாகக் கணிக்க முடியாதா என்ற கேள்வி எழுகின்றது. ஆசிரியம் என்பது உலகின் தொன்மையானதும் நவீனத்துவம் அடைந்து வருவதும் மிகப் பெரியதுமான ஒரு தொழிலாகும். இது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாண்மையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் இது ஓர் வாண்மைக்குரிய சில பண்புகளைக் கொண்டிருப்பினும் பல பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பதனை அவதானிக்கலாம் எனவே ஆசிரியம் எமது நாட்டில் பூரணமான ஒரு வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வோம்.

வைத்தியத் தொழிலைப் போல் தன்னலமற்ற ஓர் உயர்ந்த சமூக சேவையை ஆசிரியம் கொண்டிருப்பினும் அது ஆசிரியர்களின் நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பையும் நெறிப்படுத்தல் ஒழுக்கக் கோவையையும் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. எனவே ஆசிரியம் ஓர் வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு ஆசிரியர்களின் நடைமுறையைத் தீர்மானிப்பதற்கு நிறுவன அமைப்பும் நெறிப்படுத்தல் ஒழுக்கக் கோவையும் உருவாக்கப்படுதல் மிகவும் அவசியமானதாகும்.

தாய்மொழிமூலக் கல்வி, இலவசக் கல்வி, பாடசாலைகளை



அரசு பொறுப்பேற்றல் என்பவற்றால் எல்லோருக்கும் கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, கல்வி கற்கும் மாணவர் தொகை அதிகரிக்க, அதற்கு ஏற்றாற்போல் ஆசிரியர் தொகையையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் ஆசிரியர்களின் கல்வி அறிவையும் பயிற்சியினையும் உயர்ந்த தரத்தில் பேணுவதில் பாதிப்பு ஏற்பட்டது. ஆசிரியத் தொழிலிற் கிடைக்கும் குறைவான ஊதியம் பல சிறப்பார்ந்த அறிவு பெற்றவர்கள் இத்தொழிலில் ஈடுபடாது விடுவதற்கான பிரதான காரணியாக அமைகின்றது ஆசிரியத் தொழிலிலுள்ள சிறந்த அறிவு பெற்றவர்கள் வேறு தொழில்களை அல்லது கல்வி நிர்வாக சேவையை நாடிச் செல்கின்றனர். எனவே சிறந்த அறிவாற்றல் பெற்றவர்களை ஆசிரியத் தொழிலிற் சேர்த்து அவர்களை அத்தொழிலில் நிலைத்து இருக்கச் செய்வதற்கு முன்னாள் கல்வி அமைச்சர் அமரர் லலித் அத்துலத்முதலியினால் அறிமுகப்படுத்தப்படவிருந்து பின் அரசியற் காரணங்களினால் கைவிடப்பட்டது போன்ற ஓர் ஆசிரிய சம்பளத் திட்டம் தற்கால பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் தமது அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் கற்பிக்கத் தொடங்கு முன் ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்னும் சிந்தனை உருவாகி அதைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று கல்விக் கல்லூரிகள் திறக்கப்பட்டு அவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு, பின் அவர்களை ஆசிரிய சேவையிற் சேர்க்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மரபுரீதியாகப் பயிற்சியை வழங்கிவந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் பயிற்சியினை வழங்கி வருகின்றன. இவற்றிற்குப் புறம்பாகத் தேசிய கல்வி நிறுவனம் தொலைக் கல்வி மூலம் பரந்த ரீதியிற் பயிற்சியை வழங்கி வருகின்றது. பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முழுச் சம்பளத்துடனான ஒரு வருட லீவு திரும்பவும் வழங்கப்பட்டமை, பயிற்சிக்கு நிபந்தனையாக இருந்த மூன்று வருட சேவை நீக்கப்பட்டமை, தேசிய கல்வி நிறுவனம் மூலம் பெருமளவில் பயிற்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை என்பவை மூலம் பயிற்சி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டாலும் பல ஆசிரியர்கள் பயிற்சி பெறாதே கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இந்நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கட்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள் பயிற்சி வழங்குதல் என்னும்

நவீன சிந்தனையையும் கருத்திற் கொண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கல்விக் கல்லூரிகள் மூலம் பயிற்சி வழங்கும் செயற்பாடு வடக்கு - கிழக்கு மாகாணங்களிற் திருப்திகரமாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

எமது நாட்டில் ஆசிரியர்கள் தமது செயல் முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பது கேள்விக் குறியே. ஆசிரியம் ஓர் வாண்மையாகக் கணிக்கப்பட வேண்டுமாயின் தமது செயல்முறை முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இது ஆசிரியர்களுக்குப் பூரண சுதந்திரத்தை வழங்குவதன்று; மாறாக நோக்குடன் கூடிய சுதந்திரத்தை (Freedom with purpose) வழங்குவது ஆகும். இதன் மூலம் ஆசிரியர்களிடத்தே, தொடங்கும் ஆற்றல், புதுமை படைக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்த்தெடுக்க முடியும். எல்லா வாண்மையினரிடமும் காணப்படும் சுயகட்டுப்பாடு என்பதும் ஆசிரியர்களிடமும் வேண்டப்படும் ஓர் இயல்பாகும்.

ஒரு வாண்மைக்கான சிறப்பார்ந்த அறிவும் பயிற்சியும் பெறாதோர், அவ் வாண்மையை மேற்கொள்ளாது இருப்பதற்குச் சட்ட வரையறைவுகளைக் கொண்டிருப்பது வாண்மையின் இயல்பாகும். இது போன்ற ஓர் நடவடிக்கையை ஆசிரியத்திலும் மேற்கொள்ளலாமா? ஆசிரியர்களுக்கான சிறப்பார்ந்த அறிவும் பயிற்சியும் பெற்றுச் சட்டப்படி ஆசிரியர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் மாத்திரமே ஆசிரியத் தொழிலில் ஈடுபடலாம், மற்றையோர் ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவது சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட வேண்டும் என்பது பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதனால் இதுபற்றி நன்கு ஆராயப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆசிரியம் ஓர் வாண்மையாகக் கணிக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது.

விரைவில் ஆரம்பமாகின்றது.

**நினைவுகள்**

சு.வே எழுதுகிறார்.

# விகிதம்

*5 : 3 என்பதை எவ்வாறு வாசிக்க வேண்டும்? ஐந்துக்கு மூன்று என்றா? ஐந்து, மூன்றுக்கு என்றா? — தெளிவாகவும் தர்க்க ரீதியாகவும் ஆராய்கிறார் யாழ் - பரமேஸ்வராக் கல்லூரியிற் கணிதப் பேராசானாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இக்கட்டுரையாசிரியர்.*

சு. இராஜநாயகம்,

இரு கணியங்களின் பருமன்களை (அல்லது மூன்று முதலிய பல கணியங்களின் பருமன்களை) ஒப்பிடக் கணிதத்தில் விகிதம் பயன்படுகிறது.

5 : 2 என்பது ஒரு விகிதம்.

ஒப்பிடப்படும் கணியங்கள் ஒரே இனத்தைச் சார்ந்தனவாயும், ஒரே அலகில் உள்ளவையாயும் இருக்கவேண்டும்.

எடுத்துக் காட்டாக, இரு பண்டங்களின் நிறைகள் முறையே 1/2 கிலோகிறாம், 200 கிறாம் எனில், இவற்றை விகித முறையில் ஒப்பிட, இரு நிறைகளும் ஒரே அலகில், அஃதாவது கிலோகிறாமில் அல்லது கிறாமில் வைக்கப்படல் வேண்டும்.

இங்கு அந்த நிறைகள் 500 கிறாம், 200 கிறாம் என ஒரே அலகில் கொணரப்பட்டு ஒப்பிடப்படுகின்றன. ஒப்பிடும் போது முதலாவது கணியம் இரண்டாவது கணியத்தின் எத்தனை மடங்கு அல்லது என்ன பின்னம் என்பது பெறப்படும்.

மேற் காட்டிய எடுத்துக் காட்டில் விகிதம் பின்வருமாறு அமையும்: 500 : 200.

இவ் விகிதம் பின்ன உருவில் 500 / 200 என எழுதப்படலாம். இதன் சுருங்கிய உருவம் 5/2 என்பதாகும்.

ஆகவே 500 : 200 என்ற விகிதம் 5 : 2 என அதன் மிகச் சுருங்கிய உருவில் குறிக்கப்படும்.

ஒரு பின்னத்தின் பகுதி, தொகுதி என்பன ஓரே எண்ணாற் பெருக்கப்படும்போது அல்லது பிரிக்கப்படும்போது அப் பின்னத்தின் பெறுமானம் மாற்றமடையாது. அவ்வாறே, ஒரு விகிதத்தின் முன்னுறுப்பும் பின்னுறுப்பும் ஒரே எண்ணாற் பெருக்கப்பட அல்லது பிரிக்கப்படப் பெறும் விகிதம் தொடக்க விகிதத்துக்குச் சமமானது.

விகிதத்தை வாசிப்பது எவ்வாறு?

5 : 2 என்ற விகிதத்தை எவ்வாறு வாசிப்போம்?

1) ஒரு பகுதியினர் இதை "ஐந்துக்கு இரண்டு" எனவும்.

2) வேறொரு பகுதியினர் "ஐந்து இரண்டுக்கு" எனவும் வாசிப்பதைக் கேட்கிறோம்.

இக் கட்டுரையை வாசிக்கும் அன்பர்கள் எவ்வாறு வாசிக்கிறார்கள் என அவர்களே நோக்கட்டும்.

இவற்றுள் எது சரி? இரண்டும் சரியா?

(அ) இப்பொழுது பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் ஆண்டு 7 கணித நூல் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்) படிமுறை 41 - இல், 41 - 2 என்ற பிரிவு விகிதாசாரப்படி பகிர்தல் (பக்கம் 267) என்பதாகும்.

அதில், " : 2 என்ற விகிதத்தை ஒன்றுக்கு இரண்டு விகிதம் எனக் கூறமுடியும்" என எழுதப்பட்டிருக்கிறது.

(ஆ) கல்வி அமைச்சின் 1979 - ஆம் ஆண்டுப் பாடத் திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட கணிதம் 9 - 1 (முதலாம், இரண்டாம் பதிப்புகள் 1981) என்ற நூலில் அலகு 5 விகிதமும் விகிதசமமும் என்ற பாடம் (பக் 41) உண்டு இங்கு விகிதம் என்ற தலைப்பின் கீழ், இரண்டாம் பந்தி இறுதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"3 : 1 என்பது 3, 1 இற்கு என வாசிக்கப்படும்"

(இ) கிளமென் வி. தியூறல் என்னும் புகழ் பூத்த கணித நூல் ஆசிரியரின் "பள்ளிக் கூடங்களுக்கேற்ற பொது எண் கணிதம்" என்ற நூல் இலங்கை அரசகரும மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. 1964 - இல் வெளிவந்த இந் நூலில், XI - ஆம் அத்தியாயத்தில் வீதம், விகிதம், விகிதசமன் என்ற பாடத்தின் கீழ், 3 : 4 என்ற விகிதம் விளக்கத்துக்காகத் தரப்படுகிறது.

"3 : 4 என்னும் விகிதத்தை நாலிற்கு மூன்று என்று சொல்வதே தமிழ் மரபு" என்ற குறிப்பு அடைப்புக் குறிக்குள் தரப்படுகிறது. இதன்படி சொல்வது, மூன்று நாலிற்கு என்று சொல்வதற்குச் சமமாகும்.

(ஈ) அரசமொழித் திணைக்கள வெளியீடான வர்த்தக எண் கணிதம் என்ற நூல் பொதுக் கணக்குப் பரிசோதகர் சி. ந. தேவராஜன் அவர்களால் ஆக்கப்பட்டது அந் நூலில் அத்தியாயம் 18, வீதமும் விகித சமனும் என்பதாகும். அங்கு எடுத்துக்காட்டாக 5 : 8 என்ற விகிதம் காட்டப்படுகிறது. பக்கம் 135 - 136 இல்,



"5 : 8 என்ற விகிதத்தை 5, 8 உக்கு என வாசித்தல் வேண்டும். 5 உக்கு 8 என வாசித்தல் பிழையாகும். கணக்குகளையும் பிழையாக விளங்க நேரிடும். 5 உக்கு 8 என வாசித்தால் அவ்விகிதத்தை 5/8 என எழுதல் பிழையாகும். தொடர்பு 8 பாகத்தில் 5 பாகமானதினால் 8 உக்கு 5 எனவே கொள்ளல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டதை நோக்குக.

ஆங்கில மொழி - தமிழ் மொழி பெயர்ப்பு

இனி, 5 : 2 என்ற விகிதம் ஆங்கிலத்தில் எவ்வாறு வாசிக்கப்படுகிறது என நோக்குதல் தெளிவு தரும் பயனுடையது.

5 : 2 ஐ 5 to 2 எனவும், 5 is to 2 எனவும் ஆங்கிலத்தில் வாசிப்பர். இவ் விரண்டினுள் 5 is to 2 என்பதே பெரும்பான்மை.

"5 is to 2" என்ற ஆங்கில வசனத்தைத் தமிழில் பெயர்த்தால் பெறுவதென்ன?

ஐந்துக்கு இரண்டு என்பதா?
ஐந்து இரண்டுக்கு என்பதா?

ஆங்கில மொழியில் வேற்றுமையுருபுகள் பெயர்ச்சொல்லின் முன் வருவதும், தமிழ் மொழியில் அவை பெயர்ச் சொல்லின் பின்னால் வருவதும் நாமறிந்த விடயங்கள்.

ஆகவே, 5 is to 2 என்பதில், to 2 என்பது இரண்டுக்கு என ஆக, விகிதம், ஐந்து இரண்டுக்கு என்பதே சரியானபெயர்ப்பாகும். (தமிழ் மரபையொட்டி இதை இரண்டுக்கு ஐந்து எனவும் கூறலாம். ஆயினும் இதனால் மயக்கம் ஏற்பட இடமுண்டு)

ஆகவே, 5 : 2 என்ற விகிதம் ஐந்து இரண்டுக்கு எனவே வாசிக்கப்படவேண்டும்.

அச்சில் வெளிவந்தவை, அதிலும் கல்வி வெளியீட்டுத்திணைக்களம் வெளியிட்ட நூலிலுள்ளவை வேதவாக்கு எனக் கொள்ளும் பழக்கம் எம்முடையது. பெரும்பான்மையான மாணவர் விகிதத்தைப் பிழையாகவே வாசிக்கிறார்கள், இப் பிழை கற்பித்தலில் ஏற்பட்ட தவறின் விளைவு என்பதிற் சந்தேகமில்லை மேலே சுட்டிய ஆண்டு 7 கணித நூலில் உள்ள பிழை திருத்தப்படவேண்டும். கணித ஆசிரியர்களும் சேவைக்காலக் கணித ஆலோசகர்களும் இதைக் கவனத்திற்கொள்ளல் அவசியம்.

ஆண்டு 8 கணித நூலில் தவறு

பாடசாலைகளில் இப்பொழுது பயன்படுத்தப்படும் கணிதம், ஆண்டு 8, பகுதி I (கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1986), படிமுறை 11 இல் ஒரு பிரிவு 11 - 4 விகிதாசார உயர்ச்சியும் வீழ்ச்சியும் என்பதாகும்.

இதன்கீழுள்ள பயிற்சி 11. 3 (பக்கம் 58) இல் முதலிருவினாக்களையும் நோக்க வேண்டியது அவசியமாகும்.

**வினா (1)** செய்தித்தாள் ஒன்றின் விலை ரூபா 2.50 ஆக இருந்து 2 : 3 விகிதத்தில் உயர்ந்தது. தற்போது செய்தித்தாளின் விலை என்ன?

இந்த வினா பிழையானது.

ஆயினும் இதற்கான விடை ரூபா 3.75 எனப் பல மாணவர் காணுவர். அநேகமாக ஆசிரியரும் அதைச் சரி என ஏற்றுக் கொள்வர்.

பிழையான வினாவுக்குச் சரியான விடை என்பதொன்றுண்டா?

இங்குள்ள தரவின் படி செய்தித் தாளின் விலை 2 : 3 என்ற விகிதத்தில் அதிகரிக்க முடியாது. கணிதக் கோட்பாடுகளின்படி இவ்விகிதத்தில் விலை குறையுமே அன்றி அதிகரிக்காது.

2 : 3 என்ற விகிதத்தை இரண்டுக்கு மூன்று என்று வாசிக்கவும், இரண்டுக்கு மூன்று என்பதை 2 : 3 என எழுதவும் பிழையாகப் பழகிக்கொண்ட காரணத்தால் இப்பிழை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மேலே குறித்த இளமென் வி. தியூறல் எழுதிய அந்நூலில், கொடுபட்ட ஒரு விகிதத்திற் கூடுதலும் குறைதலும் என்ற தலைப்பின் கீழ், கூடுதல் குறைதல் என்பவற்றுக்கான விகிதங்களை எடுத்துக் காட்டுக்கள் மூலம் எவ்வாறு விளக்குகிறார் என நோக்குவோம்.

அங்கு 4 : 3 என்னும் விகிதம் கூடுதலையும்,

4 : 5 என்னும் விகிதம் குறைதலையும் குறிக்கும் என எடுத்துக் காட்டுகிறார். (பக்கம் 237).

**வினா (2)** தாங்கி ஒன்றில் 2500 L நீர் உள்ளது. தாங்கியிலுள்ள சிறு துவாரம் ஒன்றினூடாக நீர் வெளியேறியதால் அதில் இருந்த நீர் 5 : 3 என்ற விகிதத்திற் குறைந்தது. எஞ்சிய நீரின் அளவைக் காண்க. இந்த வினாவும் பிழையானது.

ஆயினும் இதற்கான விடை 1500 L எனப் பல மாணவர் கூறுவர். ஆசிரியரும் சரி என ஏற்றுக் கொள்வர். நூலின் இறுதியில் உள்ள விடையும் இதுவே.

வினா பிழை; விடை சரி எனல் பொருந்துமா?

இங்கும் 5 : 3 என்பதை ஐந்துக்கு மூன்று என வாசிக்கும் பழக்கமே பிழைகள் ஏற்படக் காரணமாயிற்று.

குறித்த 5 : 3 என்ற விகிதத்தில் நீர் அதிகரிக்குமே தவிரக் குறைய முடியாது. இவ் விகிதத்தைப் பின்ன உருவில் குறித்தால் 5/3 ஆகும். இப்பின்னம் ஒன்றிலும் பெரிதாகும். ஆகவே, முன்னைய மூன்று பங்குக்கு ஐந்து பங்கு புதிதாக அமைய வேண்டும்.



இது நீரின் அதிகரிப்பையே குறிக்கும்.

இவ்வாறான வினாக்களும், அவற்றுக்குத் தரப்பட்ட விடைகளுக்கேற்ப விகிதங்களைக் கற்பிப்பதும் கற்றலும் மாணவரைப் பிழையான வழியில் செல்ல வைக்கின்றன. இப் பிழை, உயர் வகுப்புக்களில் முக்கியமாகப் பல்கலைக்கழகத்தில், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் விகிதத்தைப் பயன்படுத்த வேண்டியபோது மாணவரை இடர்ப்படுத்தும். மாணவர்க்கு மலைப்பும் மயக்கமும் ஏற்படும்.

இரசாயனவியல், மருத்துவம் முதலிய துறைகளில் இப் பிழையான கற்கை எத்தகைய பாரதூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கலாம். எனினும் விரிவஞ்சி விடுக்கோம்.

நாம் செய்ய வேண்டியவை;

இந் நிலையில் நாம் செய்யவேண்டியவை எவை?

(1) கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடான கணித நூலில் உள்ள பிழைகள் திருத்தப்பட வேண்டும்.

(2) சேவைக் கால கணித ஆலோசகர்கள் மேலே கூறியவை பற்றி முதலில் தமது மட்டத்தில் ஆராய்ந்து, பின்னர் ஆசிரியர் மட்டத்தில் சரியான வழியைக் காட்ட வேண்டும்.

3) ஆசிரியர்கள் தமது நாப் பழக்கத்தால் விகிதத்தை வாசிப்பதில் தவறு ஏற்படாதவாறு காத்து, மாணவருக்குச் சரியான முறையில் கற்பிக்க வேண்டும்.

---

## பல்கலைக் கழகம் செல்வோர்

"ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளைப் போல் இன்று எமது பிரதேசத்திலிருந்து மாணவர்கள் பெருந் தொகையாகப் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகிச் செல்வதில்லை எனக் குறைப்படுகின்றோம் அக்காலப் பகுதியில் தென்னிலங்கையில் கல்வி அபிவிருத்தி குன்றிய நிலையிற்காணப்பட்டது. ஆனால் தற்பொழுதோவெனில், தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் கல்வியானது விருத்தியடைந்து நல்ல வளங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதனால் தென்னிலங்கையிலிருந்தும் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாவதால் அனுமதி பெறும் எமது மாணவர் தொகை குறையத்தான் செய்யும்.

(பேராசிரியர் சி. மகேஸ்வரன்- அறிவியற் கழகத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)

# பாடசாலைக் கட்டமைப்பில் — ஆசிரியர்

பாடசாலைச் செயற்பாடுகள் பூரண வெற்றி அடைவதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அவசியம். அவை எந்த வகையில் அமையவேண்டும் என்பதை விளக்குகின்றார், கிளிநொச்சிக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்.

அநு. வை. நாகராஜன்

ஆன்மாக்கள் இலயப்படும் இடம் ஆலயம்; அதேபோல்-வித்தை என்னும் கல்வியால் ஆன்மாக்கள் இலயப்படுகின்ற-மனிதன் பக்குவமடைகின்ற இடம் வித்தியாலயம். கல்வியைப் பெற வரும் மாணவர்கள் இங்கு அறியாமை இருளில் இருந்து அறிவொளி எனும் பக்குவம் பெறுவர். இதன் மூலமூர்த்தி-அதிபர்; பரிவார மூர்த்திகள்-ஆசிரியர்கள்; அடியார்கள்-மாணவர்கள். அடியார்களுக்கு அருள் புரியும் மூலமூர்த்தியான அதிபர் பற்றியும் பரிவாரமூர்த்திகளான ஆசிரியர்கள் பற்றியும் நன்கு விளங்கிக் கொள்வது முதற்கண் நல்லது. மூலமூர்த்தியின் ஆழமான அருள், பரிவார மூர்த்திகள் மூலம் வெளிப்படுவது போல், அதிபரின் ஆளுமை-அறிவு-ஆற்றல்-செயற்பாடு என்பன ஆசிரியர்கள் மூலம் வெளிப்படும்.

ஆதலின் அதிபரும் ஆசிரியர்களும் உருவில் வேறு வேறாயினும், மூலம் ஒன்றே. அதிபரின் மூலம், ஆசிரியம்-ஆசிரியரின் மூலமும் ஆசிரியமே. எனவே, அதிபரும் ஆசிரியரும் அடித்தளத்தில், மாணவர்களுக்கு அறிவு-ஆற்றல்-ஆளுமை - அநுபவம் என்பவற்றைத் திரட்டித் தரும் மூலவேர்கள் - வழிகாட்டிகள்.

இவர்களது செயற்பாட்டிலும், ஊட்டலிலும், வழி நடத்தலிலும் உருவாகும் மாணவர் குழாமே, நாளைய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் சிற்பிகளாவர்.

ஆசிரியத்தின் அறிவுலக-புத்திஜீவிகள் பற்றி எமது ஆன்றோர்-சான்றோர் நல்ல கருத்தும், எண்ணமும் கொண்டிருந்தனர். இதற்கான நல்லிலக்கணமும் வகுத்திருந்தனர்.

தமிழில் நன்னூல் ஓர் இலக்கண நூல். இதில், மாணவர் பற்றியும் ஆசிரியர் பற்றியும் நல்லிலக்கணம் கூறப்படுகிறது.

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இயையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே."

ஓர் ஆசிரியன,
நிலத்தைப்போல் பொறுமையும்,
மலையைப் போல் உறுதியும்
தராசைப் போல் நடுவுநிலைமையும்
மலர் போல் மங்களமாய் மென்மையும்

கொண்டிருக்க வேண்டும். இத்தகைய ஆசிரியர்களால் சமுதாயம் பெரும் நன்மை அடையும். இன்றைய நவீன-விரைந்தோடும் அவசர உலகில் சமூகவுறவும் தொழிற்பாடும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

ஆதலின் சமூகத்தின் ஓர் அங்கமான - மூலாதாரமான கல்வித்துறை, செம்மையான நெறியில் தொழிற்படல் வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. இதனுள் செலுத்தப்படும் உள்ளீடும (Input) வெளிப்படும் வெளியீடும் (Out Put) பயன் உடையதாகஇருத்தல் வேண்டும். இன்றைய ஆசிரியம், முகாமைத்துவம் என்ற பொருளியல் நோக்கில்- சிறப்பான எடுகோளுடன் (Hypothesis) விளங்குகிறது. ஆசிரியத்தை ஓர் எடுப்பான-செழிப்பான கலையாகக்கருதி- அதனை முகாமைத்துவ நோக்கிலும் நோக்குகிறோம் அதிபர்-முதன்மை முகாமையாளர் என்றால், ஆசிரியர்கள் துணை முகாமையாளர்களாகக் கருதப்படுவர்.

எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஒரு கட்டமைப்புத் தேவை. அந்த வகையில் பாடசாலைக்கும் ஒரு கட்டமைப்பு உண்டு. நவீன மயம் நோக்கி நிற்கும் முகாமைத்துவப் பணிக்கு இது மிகவும் அவசியம். இப்பணியில் ஈடுபடுவோரிடையே நல்லொழுக்கம், நல்லுறவு - நற்செயற்பாடு தேவைப்படுவதால் அவரிடையே புரிந்துணர்வும், சேவையுணர்வும், தியாகவுணர்வும் எந்நேரமும் இழையோடி நிற்க வேண்டும். பாடசாலை என்ற நிறுவனம் ஒரு புறவடிவமாயினும், அதன் அகவடிவம் ஆழமான கருத்திலும் செயற்பாட்டிலும் உள்ளது.

முதன்மை முகாமையாளராக இருக்கும் அதிபரின் கட்டுக்கோப்பில் இயங்கும் இத்தாபனம், ஓர் ஒழுங்கு முறையில் இருப்பதையும் செயற்படுவதையுங் காணச்சமூகம் விரும்புகின்றது.

அதிபரின் செயற்பாட்டுக்கு-செயல் ஒழுங்குக்கு, துணை நிற்பவர்களே ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள். இவர்களுள், ஆசிரியர்களே மிகவும் நெருங்

ிய அணுக்கத் தொண்டர்களாக உதவியாளர்களாக இருப்பர்.

அத்தகைய உயர் நிலையில், அதிபருடன் உடனிருந்து பணியாற்றும் ஆசிரியர்களது செயற்பாடே இங்கு முதன்மையாகக் கருதப்படுகிறது. அந்த வகையில்-

ஆசிரியர்களின் பங்களிப்பு என்ன என்பதையும் அவர்தம் கடமைகள் யாவை என்பதையும் இங்கு சுட்டிப்பாக அறிவோம்.

அதிபருக்குத் துணை நிற்கும் உதவி ஆசிரியர்களுள் மூப்பு- அறிவு - ஆற்றல் - அநுபவம்- ஆளுமை மிக்கோர் முன்துணையாளர்களாக-சிரேஷ்ட ஆசிரியர்களாக இருப்பர். இச்சிரேஷ்டத்துவம் பதவி வழியாலும் வரலாம். அல்லது - ஆற்றல் - அநுபவம்-விசுவாசம் என்பவற்றாலும் வரலாம்.

இதன்வழியே, பாடசாலை நிருவாகத்தில் பதவி வழியில்- முதற்படியில் அதிபரும்; இரண்டாம் படியில் பிரதி / உதவி அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியரும் மூன்றாம் படியில் பாட வகுதித்தலைவர் அல்லது பாடப் பொறுப்பாசிரியர்களும்; நான்காம் படியில் ஏனைய உதவி ஆசிரியர்களும் இருந்து பாடசாலையின் நிருவாகத்தைக்கட்டி எழுப்புவர். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பாடசாலைக்கு வெளியே நின்று உதவுவர்.

பாடசாலைக்கு மேலதிகாரிகள் மேலாண்மை செய்வர். இம் மேலாண்மைக்குக் கட்டளைச் சட்டங்கள், விதிகள், சுற்று நிரூபங்கள் மற்றும் நடைமுறைகளும் பணிப்புரைகளும் உதவும்.

இக்கட்டமைப்பில் இயங்கும் ஓர் ஆசிரியர், தான் எவ்வாறு உதவலாம் என்பதை இங்குசற்று விரிவாக நோக்குவோம்.

**01-வகுப்பறையில் ஓர் ஆசிரியன்**

01. பாடத்திற் கலந்து கொள்ளும் மாணவரை இனங்காண வேண்டும்.

02. வகுப்பறையின் பௌதிக வளத்தைக் (தளபாடம், வெளிச்சம், காற்று, உபகரணங்கள்) கவனித்தல் வேண்டும்.

3. சுற்றுச்சூழலில் தூய்மை-புனிதம் என்பனவற்றைக் கவனிப்பதோடு பேணவும் வேண்டும்.

04. கற்பித்தலில் வகுப்பாளுமை(கட்டுப்பாடு. ஒழுங்கு, அமைதி) பேண வேண்டும்.

05. வகுப்பு முதல்வரின், (Monitor) உதவியை நாடலாம். ஆனால் அவரை நம்பியிருத்தல் ஆரோக்கியமானதல்ல.

**02- பாடக் கற்பித்தலில் ஓர் ஆசிரியன்**

01. தனக்குரிய பாடநேர அட்டவணையைக் கைவசம் வைத்திருந்து அதற்கேற்பச் செயற்படல் வேண்டும்.



02. நடைமுறைச் சாத்தியமான பாடத்திட்டத்தை விரிவாகத்தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.

03. ஆசிரியர் கைந்நூல், பாடத்திட்டம், என்பனவற்றுக் கிணங்க ஒழுங்கான பாடக் குறிப்பு தயாரித்து அதிபர் வகுதித் தலைவரின் அங்கீகாரத்துடன் வைத்திருத்தல் வேண்டும்.

04, வகுப்பறைக் கற்பித்தல், பாடத்திட்டம், பாடக் குறிப்புக்கு இயைபாக இருத்தல் வேண்டும்.

05. கூடிய அளவுக்கு கரும்பலகை, வெண்கட்டியுடன் படங்கள், அட்டவணை என்பன பயன்படுத்தல் வேண்டும்.

06. கற்பித்தற் செயற்பாட்டுக்கு பாடசாலையின் சுற்றாடலிற் கிடைக்கக்கூடிய மூலவளங்களை விவேகமாகவும் இயல்பாகவும் பயன்படுத்தல் வேண்டும்.

07. வகுப்பறைச் சூழல் அமைப்புக்குப் பொருத்தமான விசேட முறைகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தல் வேண்டும்.

08. மாணவர் செயலாக்கத்தோடு அவர்தம் பாடத்தில் ஈடுபடும் தன்மையையும் ஊக்குவித்தல் வேண்டும்.

09. கற்பித்தலின் போது வகுப்பில் உள்ள சகல மாணவர்களையும் கவனத்திற் கொண்டு செயற்படல் வேண்டும்.

10. வகுப்பின் மாணவர் உளப்பாங்கு, விருப்பு வெறுப்பு, உடல் உள சமூக அமைவுகள் பற்றிய பிரக்ஞை கொண்டிருத்தல் வேண்டும்.

11. பாடநேரம் முழுவதிலும் மாணவரின் அவதானத்தை ஈர்த்துக் கொள்வதோடு அதனைப் பேணிக் கொள்ளவும் வேண்டும்.

12. தனது பாடத் துறையில் தெளிந்த அறிவு விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

13. ஏற்றுக் கொள்ளப் பெற்ற கற்பித்தல் முறைகளை அடியொற்றி, தனக்கென ஒரு கற்பித்தல் பாணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

14. கற்ற பாடத்தை மாணவர் மீட்டுக் கொள்ள ஊக்கமும் ஆர்வமும் ஊட்ட வேண்டும்.

15. குறித்த நேரத்தில், எடுத்துக் கொண்ட பாடப் பரப்பின் அலகை/ பகுதியை நிறைவு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

16. மாணவரின் தனியாள்வேறுபாடுகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். மீத்திறன் மாணவர், பின்னடைவு மாணவர் என்போரின் தன்மைகளை

இனங் கண்டு அவரவர் இயல்புக்கு ஏற்பச் செயற்படல் வேண்டும்.

17. பரிகாரக் கற்பித்தலுக்கு, திட்டமிட்டுச் செயற்படல் வேண்டும்.

## 03- மாணவரின் தொழிற்பாட்டை மதிப்பிடுதல்

01. முடிந்த வரை பாட அலகின் இறுதியில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

02. மாணவருக்குக் கொடுக்கப்படும் ஒப்படை/பயிற்சிகளை கிரமமாக மேற்பார்வை செய்தல் வேண்டும்.

03. இதற்குரிய பொருத்தமான மதிப்பீட்டு முறைகளைக் கையாள வேண்டும்.

04. வார, மாத, தவணை, ஆண்டிறுதி தேர்ச்சி மதிப்பீட்டு வினாத் தாள்களைத் தரப்படுத்திப் பேணுவதோடு பாட ரீதியாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் வேண்டும்.

05. வினாத் தாள்களை ஒழுங்கு முறைக்கு இணங்க மதிப்பீட்டுத் திட்டத்தைக் கைக் கொள்ளுதல் வேண்டும்.

06. தேர்வுப் பெறுபேற்றுக்கு இணங்க எதிர்காலக் கற்பித்தல்- பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

07. தொடர் பதிவு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

08. மாணவரின் பெறுபேற்று விபரங்களைப் பெற்றோருக்குத் தெரிவிக்க, ஏற்ற ஒழுங்கு முறைகளைக் கிரமமாக மேற்கொள்ள வேண்டும்

09. மாணவரின் தனி முயற்சி, குழு முயற்சிக்கு ஏற்ப வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தல் வேண்டும்.

## 04. ஆசிரியரின் வினைத் திறனும் ஒழுக்காறும்

01. பாடசாலைக்கும் வகுப்புக்கும் வருவதில் ஒழுங்கும், கிரமமும் பேண வேண்டும்.

02. வகுப்பில் மாணவரது தின வரவு இடாப்பு, பாடப்பதிவேடு, சுயபாடக்குறிப்பு, வகுப்பறை நூல்கள் என்பனவற்றை ஒழுங்காகவும் முறையாகவும் பேணல் வேண்டும்.

03. பாடசாலை வேளையில், நேர விரயமின்றி பயன்மிக்க செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

04. வழமையான நியமக் கற்பித்தல் வேலைக்கு மேல் பாடசாலையின் புற முயற்சிகளில் தானாகவே தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

05. தொழிற்றகைமைக் குறைபாடு அல்லது விடய ஆற்றலின்மை காரணமாக அதிபர்/ திணைக்கள அலுவலர்கள் குற்றங் காணாதிருக்க, தன்னை வளமாக்கிக் கொள்ளவேண்டும். வாண்மை வளர்ச்சியுடன் செயற்படல் வேண்டும்.



06. ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்டுக் குற்றவாளியாகக் காணப்படாத வகையில் உள்ளும் புறமும் நடந்து கொள்ளவேண்டும்.

07. தகைமை சான்ற ஆசிரியத் தொழிலுக்கு உவப்பான நடத்தை, நடை, உடை, பாவனைகளில் நல்லியல்புகள் பொருந்தக் கடமை செய்தல் வேண்டும்.

## 05. இணைபாட விதான (கலைத்திட்டம்) செயற்பாடுகள்

01. அதிபரால், திணைக்களத்தால், வகுதித் தலைவரால் குறித்தொதுக்கும் அலுவலகப் பணிகள், புறக் கடமைகள் என்பனவற்றுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

02. பாடசாலையின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நடைமுறை என்பனவற்றுக்கு இணங்க தன்னாலான சகல ஒத்துழைப்பையும் நல்க வேண்டும். பாடசாலையின் பொது நலமே முதன்மையானது எனக் கொள்ள வேண்டும்.

03. பாடசாலையின் விளையாட்டு, சாரணீயம், சமூக சேவைக் கழகங்கள், தேர்ச்சிக் கழகங்கள், கலை, இலக்கியக் கழகங்கள் என்பனவற்றுக்கு ஒத்துழைப்பு, ஆதரவு நல்க வேண்டும்.

04. இணைபாட விதான முயற்சிகளில் தன்னாற்றலுக்கு ஏற்பத் தலைமைவகித்து, வழிநடத்தல் வேண்டும்.

05. பா. அ. சபை, சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பு, ஆதரவு நல்கவேண்டும்.

06. ஆசிரிய நலன்புரி மன்றங்களுடன் இணைந்து, ஆசிரியர் சக்காதரத்துவம் பேண வேண்டும்.

07. ஆசிரியர் தொடர்பான உறவுகளுக்கு ஆதரவு, பங்களிப்பு வழங்கவேண்டும்.

## 06- தன் வாண்மை வளர்ச்சிக்குப் பயிற்சியும் தேர்ச்சியும்

01. பரந்த அளவில் பலதும் பத்தும் வாசிக்கும் பழக்கத்தைப் பேணி, நூல்கள்- சஞ்சிகைகள்- பத்திரிகைகள் வாசித்துக் கிரகித்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு, ஈடுபாடு கொண்டு தன்னறிவு வளத்தைப் பெறுவதோடு மாணவர்களையும் அவற்றுடன் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.

02. சேவைக் காலப் பயிற்சி (குறுகிய/ நீண்ட காலம்) கருத்தரங்குகளில் ஒழுங்காகப் பங்குபற்ற வேண்டும்.

03. வேண்டிய தரவுகள் குறிப்புகள் சேகரிக்க வேண்டும்.

04. தான் பெற்ற ஆற்றல் அநுபவத்தை நடைமுறைக்கு கொண்டுவர ஆவன செய்தல் வேண்டும்.

05. தன் தொழில் விருத்தி, புதிய கல்வி நோக்குகள், கொள்கைகளில் நாட்டமும் அக்கறையுங் கொண்டு பல்வேறு கற்கை நெறிகளை அநுசரித்து ஆய்வுடன் செயற்படல் வேண்டும்.

**07 நல்லுறவு**

01. பாடசாலை நிருவாக இயந்திரத்துடன் விரிந்த நோக்கில் கூட்டுறவாய் இயங்க வேண்டும்.

02. மாணவர், பெற்றோர் பழையமாணவர், சிற்றூழியர் என்போருடன் ஒற்றுமையாய், நல்லுறவு, நல்லெண்ணம் மிளிரப் பழக வேண்டும்.

03. ஆசிரியத்தின் சீரான உறவுகளைப் பேணி, நற்பணி ஆற்ற வேண்டும்.

**08. சமூகவுறவுகள்**

01. தன் சூழலுக்கு ஏற்ப சமூக மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்.

02. மூத்தோர் கல்வி, பின்னடைந்தோர் நலவாழ்வு என்பவற்றில் அக்கறையுடன் ஈடுபடல் வேண்டும்.

03. ஊரபிவிருத்தி, சமூகப் பணி என்பவற்றுடன் தொடர்பு கொண்டு நல்மன விழுமியங்களை வளர்த்தல் வேண்டும.

□

## கல்வித் தரம்

நீங்கள் கற்றவற்றுள் மறந்தவை போக, எஞ்சியிருப்பவற்றைக் கொண்டே உங்களின் உண்மையான கல்வித் தரம் கணிக்கப்படுகின்றது.

# விளக்கு வெளிச்சத்தில்...

உடற் கல்வி: ஆசிரியர் கே. நாகமணி, வெளியீடு: க.குமாரசாமி, இரா. மதியழகன் 39, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

உடல், நலமாக இருந்தாற்றான் உள்ளம் உற்சாகத்துடன் செயற்படும். "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா" என்கிறார் பாரதியார். சோம்பலை நீக்கி அனைவரையும் சுறுசுறுப்புடன் செயற்பட வைப்பதில் விளையாட்டுக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. விளையாட்டுகளில் நாட்டமில்லாத பிள்ளைகளைக் காண்பது அரிது. இந்த இயல்பூக்கத்தை ஒழுங்கான முறையில் வளர்த்தெடுதது, நற்பயன்கள் பெருக வழிவகுப்பதற்காகவே ஆரம்ப வகுப்புத் தொடக்கம் ஆண்டு 11 வரை "உடற்கல்வி" கட்டாய பாடமாக நமது பாடசாலைகளில் ஆக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடும் விசேட பயிற்சியும் போதிய அனுபவமும்பெற்ற ஆசிரியர்களின் தொகை மிக மிகக் குறைவு என்பது வருத்தத்திற்குரியது. இக் குறையைப் பெருமளவில் நீக்கும் பொருட்டு வெளிவந்துள்ளது "உடற்கல்வி" என்னும் நூல். இதன் ஆசிரியரான ஓய்வு பெற்ற உடற்கல்வி-உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. நாகமணி, உடற்கல்வி ஆசிரியராக, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக, ஆசிரியர் முன்சேவைப் பயிற்சி முகாம் தலைவராக- 35 ஆண்டுகளாகத் தான்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இந்நூலை உருவாக்கியுள்ளார். "உடல் வலுவையும், சக்தியையும், உடல் வளர்ச்சியையும், உடற் திறனையும் வளர்ப்பதுதான் உடற் கல்வியின் நோக்கமல்ல, நற்பண்பு, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு, நேர்மை விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை போன்ற பொதுக்கல்வியின் விழுமியங்களை வளர்க்க உடற்கல்வி உதவுகின்றது" எனச் சரியாகக் குறிப்பிடும் ஆசிரியர், ஒவ்வொரு விளையாட்டு- பயிற்சியினதும் நோக்கம், தன்மை, விதிகள், செய்யவேண்டியவை, செய்யத் தகாதவை- போன்ற எல்லாவற்றையும் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். சுருக்கமாகச் சொன்னால் ஆர்வமுள்ள ஆசிரியர்களை, உடற்பயிற்சி ஆசிரியர்களாக, நடுவர்களாக, விளையாட்டுப் போட்டி அமைப்பாளர்களாகப் பரிணமிக்கச் செய்யும் ஆற்றல் இந்த நூலுக்குண்டு. நூலாசிரியர் திரு. கே. நாகமணி அவர்களையும், இன்றியமையாத் தேவையொன்றை நிறைவேற்றும் வகையில் இந்நூலை அழகாக வெளியிட்ட திரு. க. குமாரசாமி, திரு. இரா. மதியழகன் ஆகியோரையும் கல்வி- விளையாட்டுலகு நன்றியுடன் பாராட்டும் என்பதற்கு ஐயமில்லை.

—சாரங்கா

# உள்ளம் கலந்த நல் வாழ்த்துக்கள்

"விளக்கு" இதழுக்கு ஒரு நடுவப் பணியகம் இன்றியமையாததாகும். இதைக் காலத்தால் உணர்ந்து செய்யும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வாண்மைக் குழு பாராட்டுக்குரியது: "விளக்கு" நன்கு சுடர்விட இப்பணியகம் பேருதவி நல்கும் என்பதில் ஐயமில்லை.

**அ. சண்முகதாஸ்**

"விளக்குப்" பணியகம் தொடர்ந்து செயலாற்ற எனது வாழ்த்துக்கள்.

**ஈ. ஆர். திருச்செல்வம்**

"விளக்கு" சஞ்சிகை, தனது சேவையைப் பெருக்கி வெற்றிநடைபோட எனது வாழ்த்துக்கள்.

**சி. புலந்திரன்**

"விளக்கு"த் தலைமைப் பணியகம் திறக்கப்பட்டு விழாக் கொண்டாடப்படும் இந்த நன்னாளில் "விளக்கு"ச் சஞ்சிகை சுடர்விட்டுப் பிரகாசிக்க எனது வாழ்த்துக்கள்

**பொ. வீரபத்திரன்**

*விளக்கு என்றும் விளங்கிடுக*
*விளக்கம் மேலும் தந்திடுக*
*கலக்கம் முழுதாய்த் தீர்த்திடுக*
*கல்வி உலகிற் சிறந்திடுக.*

**க. கனகசிங்கம்**

*யாழ்ப்பாணம், காங்கேசன் துறைச்சாலை 689ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள "விளக்கு" அலுவலகத் திறப்பு விழா 16-5-94 திங்கட்கிழமை நடைபெற்றது. தமிழீழக் கல்வி மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தேசியக் கொடியை ஏற்றினார். யாழ் இந்துக் கலலூரி மாணவர்கள் தேசியக் கீதம் இசைத்தனர். பேராசிரியர் அ. சண்முகதாஸ். திருவாளர்கள் சி. புலந்திரன். பொ. வீரபத்திரன், திருவாட்டி சி. இராமநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றினர். திரு. சி. சிவசரவணபவன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பேராசிரியர் அ சண்முகதாஸ், திருவாளர்கள் பொ. வீரபத்திரன் பொ. அருணகிரிநாதன், வல்வை ந. அந்தராஜ், க. வை. தனேஸ்வரன், சி. சிவசரவணபவன், வெ. இளங்குமரன், அருண் மாஸ்டர், திருவாட்டி சி. இராமநாதன் ஆகியோர் பேசினர். அன்பர்கள் சொரிந்த வாழ்த்து மலர்களைக் கோத்துத் தருகின்றோம்.*

ஆசிரியர் வாண்மைக்கு உதவிடும் விளக்கு;
இருளை அகற்றி ஒளிவிடும் விளக்கு;
கல்வி உலகின் அணையா விளக்கு-
வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

**ந. அநந்தராஜ்**

விளக்கு புதிய அம்சங்களுடன் கல்வி உலகின் கலங்கரைவிளக்கமாக நிலைத்திட வாழ்த்துகிறேன்

**பொ. அருணாகிரிநாதன்**

தவழ்ந்து வரும் "விளக்கு" வளர்ந்துவந்து ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு உதவவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சி தார்சீசியஸ்**

ஆசிரிய சமுதாயத்தின் வாண்மை விருத்தியை ஊக்குவிக்கும் "விளக்கு" சஞ்சிகைக்கு ஓர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட இன்றைய நிகழ்வு மகிழ்வாக அமைந்தது. இது எல்லா ஆசிரியர்களுடைய வாண்மைக்கும் திறவு கோலாக அமைய வாழ்த்துகிறேன்.

**தி. இராமநாதன்**

விளக்குப் பணியகம் வேண்டும் வளம் பெருக்கி
துலக்கமாக ஒளி பரப்பி - இருளகற்றி
நலத்தை ஊட்டி நல்வாண்மை விருத்திபெற
பலத்தை ஊட்டுக பயன்.

**நா. க சண்முகநாதபிள்ளை**

# ஆரம்பக் கல்வி

*அத்திவாரம் சரியாகவும் பலமாகவும் இருந்தால் மட்டுமே கட்டடத்தின் மேற்பகுதி உறுதியாக இருக்கும். ஆரம்பக் கல்வியும் அத்திவாரம் போன்றதே. அது சம்பந்தமான பயனுள்ள சில கருத்துக்களைத் தருகின்றார் மட்டுவில் அ, மி. த. க. பாடசாலை அதிபர்.*

செ. க. துரைரத்தினம்

ஐந்து வயதைப் பூர்த்தி செய்த மாணவர்களிடம் காணப்படும் திறன்களை மதிப்பீடு செய்வதன்மூலமே ஆண்டு ஒன்றிற்கான முறைசார் கல்விக்குரிய பாடத்திட்டத்தை ஆக்கிக்கொடுக்கவேண்டும். பாடசாலைப் புகுநிலைத் திறன்களைக்கண்டறியப் பரந்த அளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும், இவை பெரும்பாலும் பரம்பரை, சூழல், ஆகிய இரு பெரும் விருட்ச நிழல்களிலேயே ஆரம்பமாகின்றன எனலாம். இருந்தாலும் மாணவனுடைய இயல்பாற்றல், அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியன பரம்பரை, சூழல் ஆகியவற்றோடு ஏற்படுத்தும் தாக்கத்தை மாணவன் ஏற்றுக்கொள்கிறானா? அல்லது அவற்றின் தாக்கவிளைவு அவனுடையவிருப்புக்கு முரணாக அமைந்து வெறுக்கிறானா? என்பதைக் கவனத்துக்கு எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

உளவியல் ரீதியாக, மாணவன் ஏற்றுக்கொள்ளாதவற்றை நாம் திணிக்கிறோமா? என்பது பற்றி நாம் சிந்தனைக்கு எடுப்பதே இல்லை. பொருளாதாரப் பற்றாக்குறை, சனத்தொகை அதிகரிப்பு, கல்விசார் வளங்கள் போதாமை, வேண்டிய ஆளணி பற்றாமை போன்றவையே நாம் சிந்திக்காமைக்குரிய காரணங்கள் (எமது நாட்டு அரசியல் குழப்பங்களும், நாட்டினதும் தனி மனிதனதும், பொருளாதாரம் பிரச்சினைகளாயிருக்கச் சிறுவரைப்பற்றிச் சிந்திக்க ஏது அவகாசம் என்ற வினாவும் உண்டுதான்.)

சிறுவர் சம்பந்தமாகச் சிந்திக்கவேண்டிய அமிசங்களும் செயற்படுத்தவேண்டிய அமிசங்களும் நிறையவுண்டு. கல்விக்காகச் செலவிடுவது செலவீனமல்ல; மூலதனம் என்ற முடிவைப் பெற்றுவிட்ட காலகட்டத்திற் கல்வி என்பது மேற்கல்வி மட்டுமல்ல ஆரம்பக் கல்வியும்தான் என்பது நினைவிலிருத்தப்படவேண்டும். ஆரம்பக் கல்வி பிள்ளை பிறந்த ஓரிரு நாள்களில் தாயின் முகத்தை இனங்காணுவதோடு ஆரம்பமாகிறது. ஏன் பிறந்தது முதல் என்று கூறினாற்கூடத் தவறில்லை என்பது உளவியல் கூறும் கருத்தாக உள்ளது. ஆனால்ஐந்து வயதிற்கு மேல்தான் முறைசார் கல்வியைத் தொடங்கக்கூடிய வாய்ப்புஎமது நாட்டில் நடைமுறைக்கு உண்டு. ஐந்து வயது பூர்த்தியாகும் முன்னரேயே கல்வியைக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஆசை கற்றோரும் மற்றோரும் மத்தியில் நிலவுவதை நன்கு அவதானிக்கலாம். அப்படிக் கல்வியைக் கொடுத்துவிடவேண்டும் என்று விரும்புபவர்கள் எப்படிக் கொடுக்கவேண்டும் என்று சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள்.

தமக்குப்பிறந்த குழந்தையை என்ஜினியராகவோ, டாக்டராகவோ, கல்விமானாகவோ காணவேண்டும் என்ற ஆவலால் அவசரப்பட்டுத் தாம் நினைத்ததைப் புகட்டத் துடிக்கும் பெற்றோர்களும், கண்மூடித்தனமாகச் சிறுவர் பாடசாலைகளை நடத்தும் ஆசிரியர்களும், ஆரம்பத்திலேயே குழந்தைகட்குக் கல்வியைச் சுமையாக்கிவிடாதீர்கள் என எச்சரிக்கப்படவேண்டியவர்கள் ஆவர். பாலர் கல்வி நிதானமாக அமையவேண்டும். ஆரம்பம் சரியாக இருக்கவேண்டும், அத்திவாரம் பலமாக ஆறுதலாகத் திட்டமிட்டுக் கட்டவேண்டியதொன்று. சுவர்களை விரைவாக ஓரிரு நாள்களிற் கட்டி முடித்துவிடலாம். சுவர் எழுப்பப்பட்ட பின் அத்திவாரம் பலமில்லை என்பதுஉணரப்படும் பட்சத்தில் அத்திவாரத்தைத் திருத்துவது சாத்தியமா.?

க. பொ. த. (சா./த)சித்தியடைந்த மாணவர் க. பொ. த (சா. த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்குக் கல்விபுகட்ட முடியும்; க. பொ. த. (உயர் தரம்) சித்தியடைந்த மாணவர் க. பொ. த. (உயர் தர) ப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவருக்குக் கல்விபுகட்ட முடியும் ஒரு பட்டதாரி, பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு உதவமுடியும். இதைத் தனியார் கல்வி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. ஆரம்பக் கல்வியைப் பெறவேண்டிய மாணவர்களுக்கு இவர்கள் யாருமே கல்வியூட்ட முடியாது.

ஆரம்பக் கல்வியை ஊட்ட முற்படுபவர் குழந்தையின் இயல்பாற்றல், மனப்பாங்குபற்றிப் பயிற்சிமூலமோ, குழந்தை உளவியல்பற்றி நன்கறிந்தோ வைத்திருக்கவேண்டியது மிக அவசி

யம். மிகவும் பொறுமையோடு
திட்டமிட்ட முறையிலே பிள்ளை
யின் நிலைக்கு இறங்கி ஆராய்
ந்து. பிள்ளையிடம் பல விடயங்
களைக் கற்று குழந்தைக் கல்வி
யில் வெற்றி கண்டவர்களே
பெஸ்ரலோஜி, பெற்றிக் பிறீ
பல், கலாநிதி மொண்டிசூரி அம்
மையார் போன்றவர்கள். இவர்
களிற் பலர் கல்விப்பட்டங்கள்
பெற்றவர்கள். இலங்கையில்
பட்டம்பெற்ற அறிஞர்கள் இவ்
வித ஆய்வில் ஈடுபடுவது மிகக்
குறைவே. அதிகாரிகளாகவேண்
டும் அல்லது மேல் வகுப்புகளில்
கற்பிக்க வேண்டும் என்பதை
மதிப்பிற்குரியதாகக்கருதிப்
பட்டதாரிகள், டிப்புளோமா
படித்தவர்கள் மேலே செல்ல,
முறையே பயிற்சி பெற்றவர்களு
டன் கல்விப் பொதுத் தராதர
உயர் தரம், சாதாரண தரம்
படித்தவர்கள் கீழே செல்ல
ஆரம்பக் கல்வி அடித்தளத்தில்
100 வீத மாணவர்கள் கறகும்
பகுதி ஆட்டத்தில் அமைகிறது.
ஆரம்பக் கல்விக்கென தெரிவு
செய்யப்படும் க. பொ. த. உயர்
தர சாதாரணதர ஆசிரியர்கள்
கூடத் தம் துறையை மாற்றி
மனையியல், விவசாயம், விஞ்
ஞானம், கணிதம், விசேட தமிழ்
என்றும் பயிற்சியைப் பெற்றுக்
கொண்டு மதிப்பின் அடுத்தபடி
யான ஆண்டு 6 - 11 வரையான
இடைநிலைத் தரங்களுட் பிரவே
சித்து விடுகிறார்கள். இதனால்
" ஆரம்பக் கல்வி கற்பிக்கும்
கஷ்டத்தில் இருந்து தப்பிவிட்
டோம்" என்றே கருதுகிறார்
கள். மீதி ஒரு சில ஆசிரியர்கள்
சந்தோஷமாகப் பணியாற்றிய
வர்கள் கூட, பற்றாக்குறை ஆசி
ரியர்களின் வேலையையும் மேற்
கொண்டு, முழு மனத்துடனோ
அரை மனத்துடனோ கற்பித்து
வருகிறார்கள். இதேபோன்று,
ஆரம்பக் கல்வியைப் பெறும்
மாணவர்களுட் தாமாக விரும்
பிய ஒரு பகுதியினரும் பின்தள்
ளலால் ஒரு பகுதியினரும்
( வகுப்பை ஆண்டுதோறும் சம
நிலைப்படுத்தும் தேவைக்காக
வகுப்பேற்றப்பட்டோர், பெற்
றார் விருப்பத்திற்காக ஏற்றப்
பட்டோர், இரண்டாம் முறை
யும் சித்தியடையாதோர், வயது
வந்தோர், பெற்றார் வற்புறுத்
தலால் ஏற்றிவிடப்பட்டோர்)
விரும்பியும் விரும்பாமலும் நீந்
திக்கொண்டுவந்து, இடை
நிலைக் கல்விக்குள்ளேயும் பிர
வேசித்து விடுகிறார்கள். குறை
ந்த எண்ணிக்கையானோர்
மேலும்நீந்திச்சென்றுமேற்கல்விக்
குச்செல்ல, பெருந்தொகையினர்
அடிப்படைக் கல்வியைக்கூடப்
பூரணமாகப் பெறாதவர்களாய்,
பரீட்சை மையக் கல்வி சுசந்த
நிலையில் இடைவிலகிச் செய்வ
தறியாது திகைத்து நிற்கின்ற
னர். இப்படியான மாணவர்களு
க்கு ஆண்டு 7, 8ல் புகுத்தியிரு
க்கும் வாழ்க்கைத்திறன் என்ற
பாடம் தன் கதவுகளை அகலத்
திறந்துவைத்து ஓரளவு ஆறுத
லளிக்கிறது வரவேற்கத் தக்கது.
அதற்குக்கூட ஆரம்ப அடித்
தளக்கல்வி சிறப்பாக அமைந்து,
இடைத்திருக்குமாயின் பேரு
தவியாகவே இருக்கும் என்பது
தெளிவாகிறது.



மேற்கல்விக்கோ, வாழ்க்
கைக்குத் தயாராவதற்கோ,
ஆரம்பக் கல்வி முக்கியத்துவம்
பெறுகிறது என்பது பலராலும்
ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.
அதைச் செயற்படுத்துவதிலே
தான் கடின உழைப்பு வேண்டும்.
சிந்தித்துச் செயலாற்ற வேண்
டும். ஆரம்பக்கல்வியில் ஈடுபடு
பவர்களும் உயர்ந்தவர்களே
என்ற நிலைப்பாட்டை உரு
வாக்கியே தீரவேண்டிய காலம்
வந்துவிட்டது.

ஆண்டு ஒன்றிலோ, அதற்கு
முன்போ ஒரு வட்டம் இடஞ்
சுழியாகத் தானாகவே பழகி
விட்ட மாணவனை வலஞ்சுழி
யாக மாற்றவேண்டிய தேவை
உண்டு. மாற்ற யாரால் முடியும்?
வலமாகச் சுழிக்கப் பயிற்சி
கொடுத்துவிட்டு, கற்பிப்பவர்
மறுபக்கம் திரும்பிவிட்டு மீண்டும்
பார்த்தால், மாணவர் பழைய
படி இடஞ்சுழியாகச் சுயாதீன
மாகச் சந்தோஷமாகச் சுழித்
துக் கொண்டிருப்பார். என்ன
செய்யலாம்? எப்படி இவரை
மாற்றலாம்? என்று ஆழமாகப்
பொறுமையுடன் சிந்திப்பவர்
நல்ல ஆரம்பக்கல்வி ஆசிரியர்.
கோபித்து தண்டம் வழங்குபவர்
பாவம், குழந்தை உளவியல்
தெரியாதவர். இங்கு சூத்தி
ரமோ, சண்டுபிடிப்புக்களோ,
வாய்ப்பாடோ வேலை
செய்யா.

நல்ல ஆரம்பக்கல்வி ஆசிரி
யர் பணி எத்தகையது? மதிப்புப்
பெறவேண்டியவர்கள் யார்?
ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவம்
எத்தகையது? கவனமெடுக்கப்பட
வேண்டிய பகுதி எது? என்பவை
பற்றிச் சிந்தித்துப்போமாக!

புகு நிலைத் திறன் வயது
ஐந்தை பூர்த்தியாக்குமுன்பெற்
றுக்கொண்ட அறிவை ஆய்வு
செய்த யப்பானிய நிபுணர் ஒரு
வரும் திரிலோகசுந்தரி காரியவா
சம் அவர்களும் கவனத்திற்
கொள்ளத்தக்கவர்கள். அவர்க
ளது ஆய்வின் அடிப்படையில்
1993 ம் ஆண்டில் ஆண்டு ஒன்றி
லும் 1994ம் ஆண்டில் ஆண்டு
2லும் புதிய பாடத்திட்டம் ஒன்று
நடைமுறைக்கு வந்துள்ளது.
ஆண்டு ஒன்று பாடத்திட்டத்தில்
20 சுற்றாடற்கல்வி அலகுகள்
உண்டு, மொழியில் - கேட்டல்
கிரகித்தல் (21 அலகுகள்),
பார்வை பிரித்தறிகை (7 அலகு
கள்) உளவியக்கச் செயற்பாடு
கள் (8 அலகுகள்) பேச்சுமூல
வெளிப்பாடு (20 அலகுகள்)
வாசிப்பு (3 அலகுகள்) எழுத்து
(5 அலகுகள்) என எல்லாமாக
6 திறன்கள் அறிமுகப்படுத்தப்
படுகின்றன. முன்பு நடைமுறை
யில் இருந்த பாடத்திட்டத்தை
விட கணித எண்ணக் கருக்கள்
13, ஆண்டு ஒன்றிற்குப் புதிதா
கப் புகுத்தப்பட்டுள்ளன. இவை
யாவும் ஒன்றிணைந்த கற்பித்தல்
அடிப்படையிற் சிறப்பாகப்
புதிய அணுகுமுறையைக் கையா
ண்டு வகுக்கப்பட்டுள்ளன.

இதே அடிப்படையில் 1994-ம்
ஆண்டு 2 க்குரிய பாடத்திட்
டம் ஒருசில வளர்ச்சிப் படிகளு
டன் வெளிவந்து நடைமுறைப்

படுத்தப்படுகிறது. பாராட்டப்படவேண்டியதுதான். ஆனால், இந்த ஆய்வு குறிப்பிட்ட வட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகவே காணப்படுகிறது. எனவே வெவ்வேறு சூழல்களிலும் மாணவர் புகுநிலைத் திறன் ஆய்வுசெய்யப்பட்டுப் பொதுமையான ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கவேண்டும் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சில அறிஞர்களால் ஆக்கப்பட்ட நடைமுறையிலுள்ள துணைநூல் அதாவது பாடநூல் தமிழ் வாசகம், செயல் நூலில் முறைசார்கல்வியின் தொடக்கமாக, இலகுவான நிலைக்குத்துக்கோடு, கிடைக்கோடு, வலஞ்சுழியாகவும் இடஞ்சுழியாகவும் வளை கோடுகள், நெளிகோடுகள், சுருள் கோடுகள், சங்கிலிக் கொம்புகள் வட்டம் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. காட்டப்படாதவற்றுக்குக் கூடப் பயிற்சிகளை மேற்கொண்டு விளையாடி, கேட்டதைச் செய்யக்கூடிய மாதிரி இனங்கண்ட பின், படங்களை இனங்கண்டு படம் போல, ‘‘படம்’’ என்ற சொல்லை இனங்கண்டு படம் என்ற சொல்லை எழுதத் தூண்டலாம் மாணவரும் இசைவுபடுவர். படிப்படியாக எழுதத் தூண்டலாம் என்பது தெளிவு.

இன்றைய பாலர் பாடசாலைகள் (பயிற்சி பெறாத ஆசிரியர்கள் கற்பிக்கும்) பழைய முறையில் மொழியில் அ ...... ... தொடக்கம் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும், மெய் எழுத்துக்கள் பதினெட்டையும், உயிர்மெய் எழுத்துக்களையும் தொடர்ச்சியாகக் கற்பித்தும், கணித பாடத்தில் ஆண்டு 1 ல் 15 எண்ணக்கருக்களைக் கொண்டு 10 வரை பாகுபாடு தான் என்று சொல்லியிருக்க, ஒன்று தொடக்கம் 100 வரையும் அதற்குமேலும் சுமை ஏற்றிக் கற்பிக்கப்படுகிறது. பெற்றோர் எதிர்பார்ப்புக்காகவே என்பது அவர்கள்காட்டும் காரணம். இதனால் ஆசிரியை செட்டிக்காரி எனப் பாலர் பாடசாலையோடு தொடர்புடையவர்களால் பாராட்டப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்படுகிறார். இதனால் இருபெருங் கேடுகள் விளைகின்றன.

மொழியில் இலகுவான முறையிருக்க, பழைய கடினமான முறையில் வாசிப்பதை எழுதுவதைச் சுமையாகப் பிள்ளைகள் கருதத் தொடங்கினால் விளைவு யாது? வெறுப்பு, வேறுபாடு அறிவதில் சிக்கல். போதிய எண்ணக்கரு விளக்கமின்றி மனன அடிப்படையிற் கல்வியைப்பெற்றுப் பெருஞ்சுமையை ஏற்கிறார்கள். எண்களைத் தவறாகவும் எண்ணுகிறார்கள். ஆண்டு 1 ல் சேரும் மாணவன் முறைசார் கல்வியுடன் முரண்பாடுகளைச் சந்திப்பதுடன் முறையாக ஆரம்பிப்பதற்கும் தயாரில்லாது மீத்திறன் மாணவன்போல குழப்படிக்காரனாயிருப்பான். ஆனால் முறைசார் கல்வியை ஒழுங்கில் கற்கும் மாண



வரிடையே மதிப்பீட்டு வினாக்கள் எழும்பும்போது இவன் விடையளிக்க முடியாது. கஷ்டப்படுவான்

பாலர், புகுநிலைத் திறனை வளர்க்க விரும்பும் பாலர் பாடசாலை ஆசிரியராயினும் பெற்றாராயினும் வேறு எவராயினும் சிந்தித்துச் செயலாறற வேண்டும். முறையான பயிற்சி பெற்றபின் பாலரைக் கற்கத் தூண்டவேண்டும் என்பதே இங்கு வற்புறுத்தப்படுகிறது. முறைசார்கல்வியிலும் பாடத்திட்டத்திலுள்ள பாடங்களை சுற்றாடற்கல்வி அலகுடன் ஒன்றிணைத்து அதாவது தொடர்புபடுத்திக் கற்பிக்க வேண்டும். பாடத்திட்டத்தை வேலைத்திட்டமாக மாற்றிச் சிறு அலகுகளாக்க வேண்டும். உதாரணமாக ஆண்டு 4, 5ற்குரிய சுற்றாடற் கல்வியை எடுப்போம். வாரத்தில் 4 பாடவேளைகள் ஒரு வருடத்தில் பாடசாலைகள் நடத்தக்கூடிய காலம் 36 வாரம். விளையாட்டுப்போட்டி, போன்ற இணைபாடவிதான முயற்சிகளைக் கணக்கிலெடுத்தாலும் குறைந்தது 30 வாரம் கற்பிக்கலாம். ஆகவே $30 \times 4 = 120$ பாடவேளைகள். கற்பிக்கவேண்டிய அலகுகள் 11. ஒவ்வொரு அலகும் 10 பாடவேளைகளுக்குக் குறையாது கற்பிக்கலாம். ஒரு பாடவேளையில் ஓர் அலகின் 1/10ஐத்தான் கற்பிக்க வேண்டும்.

இதனால் எல்லா மாணவர்களும் அச்சிறிய அலகின் முழுப் பகுதியையும் விளங்கிப் பயன்பெற முடியும். இவ்வாறு எல்லாப் பாடங்களையும் திட்டமிட்டுப் பாடவேளைகளுக்கு ஏற்ப, சிறுசிறு அலகுகளாக வகுத்துக் கொள்ளவேண்டும். ஒரு சிறிய அலகினைச் சிறந்த கற்பித்தல் துணைச்சாதனங்களோடு கற்பிப்பது திட்டமிட்டுக்கொண்ட ஆசிரியருக்கும் இலகுவானதுதான். பாடத்திட்டத்தை பாடவேளைகளுக்கு ஏற்ப வேலைத்திட்டமாக்கும் போதும் ஒவ்வொரு சிறிய அலகிற்கும், கற்பித்தல் துணைச்சாதனம், பாட முன் ஆயத்தம் செய்யும் போதும் உண்மையிலேயே ஆசிரியர் மிகவும் கஷ்டமான வேலையைத்தான் மேற்கொள்ளுகிறார்.

ஆனால் ஒரு மாணவன் ஆண்டு ஐந்து பூர்த்தியாகும் போது ஆரம்பக்கல்வியைப் பூரணமாகப் பெற்று விட்டானாயின், மேற்கல்விக்கோ, இடைநிலைக் கல்விக்கோ, வாழ்க்கைத் திறன் கல்விக்கோ நுழையும் போது துணிவோடும் மகிழ்வோடும் எம்மை வாழ்த்திக்கொண்டு காலடி எடுத்துவைப்பான் இந்த மனம்நிறைந்த வாழ்த்தில் ஆசிரியர் தன் கஷ்டங்களையெல்லாம் மறந்து பூரிப்பார்.

# அன்புடன் செயற்படுவோம்

*மாணவர்களின் ஆளுமை வளர்க்கப்படல் வேண்டும். அன்பு, புரிந்துணர்வு பொறுமை முதலிய பண்புகள் ஆசிரியர்களிடம் இருப்பது இன்றியமையாதது; இவற்றுள் அன்பு மிகவும் முக்கியமானது.*

**பா. தனபாலன்.**

மனிதனுடைய ஆரோக்கியத்திற்கு உடலைப்போன்று உள்ளமும் நோயற்றதாக இருத்தல் வேண்டும். மனித உளவியல் பற்றிய கருத்துக்கள் இன்று பலவாறு வளர்ச்சியடைந்துள்ளன. உளவியல், மனிதனது நடத்தையை விளக்க முயலும் அறிவியலாகும். ஒவ்வொரு மனிதனும், இசைந்த வளர்ச்சி பெறவும், உள்ளத்தில் நிகழும் போராட்டங்களினால் எழும் தவறான நடத்தைகளைத் தவிர்க்கவும் உளவியலறிவு உதவுகின்றது; கல்வி, சமூக மேம்பாட்டிற்கும், ஆளுமை விருத்திக்கும் இந்த அறிவு தேவைப்படுகின்றது

''என்னைத் தனியாக விடுங்கள்!
என்னை அழ விடுங்கள்!
நான் ஏன் அழக்கூடாது? நான் ஏன் என் கண்ணீரை மறைத்துக்கொள்ள வேண்டும்''?

எனக் கவி பாடினார், கவியரசர் மிர்ஜா கலீப் என்ற அறிஞர். தாக்கப்பட்ட மனித உள்ளத்தின் வேதனைக் கதறல் இது. ஒவ்வொரு மனிதனும், தன்னைச் சூழ நிகழ்கின்றவற்றால் ஏதோ ஒரு வகையிற் பாதிக்கப்படுகின்றான். அவனுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டுபவையும் உண்டு. வேதனையையும் வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்துபவையும் உண்டு. எந்த விதமான நிகழ்வானாலும், அதை ஒரு படிப்பினையாகக் கருதிச் சாதகமான பயனைப் பெறுவது அவனுடைய ஆளுமையிலே தங்கியிருக்கின்றது.

மாணவ சமுதாயத்தை மிகச் சிறப்பாக உருவாக்கி எதிர்காலக் குடிமக்களான அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும் என்பதே எல்லா நாடுகளின் விருப்பமுமாகும். இந்த அடிப்படையிலேயே கல்வித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆளுமையானது, அறிவு, மனப்பாங்கு, உடலமைப்பு, சமூக உணர்வு, அன்பு ஆன்மீக நோக்கு முதலிய பல பண்புகளின் ஒருங்கமைப்பாகும்.



ஆளுமை விருத்தியிற் சூழ்நிலையும் மரபுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தாயின் அரவணைப்பிலே, தனித்தன்மையான ஒரு சூழலிலே வாழ்ந்த குழந்தை, மாணவனாகப் பாடசாலைக்கு வருகின்றது; வீட்டிலே கிடைத்த அன்பு, நட்பு, காப்பு, கணிப்பு முதலியவற்றைப் பாடசாலையிலும் எதிர்பார்க்கின்றது. இவற்றை உரிய அளவில், உரிய முறையில் அளித்து, புதிய சூழலில் வாழ இசைவாக்கம் செய்யும் பெரும் பணி ஆசிரியர்களுடையது. மாணவர்களை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமல்லாமல், அன்பு, புரிந்துணர்வு, பொறுமை முதலியவையும் ஆசிரியர்களிடம் இருப்பது இன்றியமையாதது. இவற்றுள் அன்பு மிகவும் முக்கியமானது. அன்பு இருந்தாற் புரிந்துணர்வும், அதனைத் தொடர்ந்து பொறுமையும் உருவாகும்.

மாணவர்களின் குடும்ப, பொருளாதாரப் பின்னணிகள் வேறுபட்டவை என்பதை ஆசிரியர்கள் மறத்தலாகாது. மகிழ்ச்சியான குடும்பம், மகிழ்ச்சியற்ற குடும்பம், வசதி நிறைந்த, குறைந்த குடும்பம் என குடும்ப, பொருளாதார தரங்கள் வேறுபட்டவை. இவை மாணவர்களின் கல்வி ஆர்வத்தை, முன்னேற்றத்தை நடத்தைக்கோலத்தைப் பாதிக்கின்றன. இப்படி வித்தியாசமான பின்னணிகளுடன் வரும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவைக் கொடுக்கும் அமைப்பாகப் பாடசாலை அமைய வேண்டும்.

உணவு, உடை, கொப்பி' பென்சில் போன்றவை இல்லாமற் சில மாணவர்கள் பாடசாலைக்கு வர நேரிடுகின்றது. இந்த இல்லாமை அவர்களுடைய நடத்தையைப் பாதிக்கின்றது. கல்வியிற் பின் தங்குவதற்கு இது ஏதுவாகின்றது. விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றது. இவர்களின் தவறான செயல்களைக்கண்டு ஆத்திரமடைந்து தண்டனை வழங்காமல், தவறான நடத்தைக்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து, அதை நீக்க முயல வேண்டும்.

பிள்ளைகளின் ஆர்வத்தையும் ஆற்றலையும் சரியாகக் கணிக்க முடியாத பெற்றோர் தம் விருப்பங்களையும் இலட்சியங்களையும் அவர்கள்மேற் திணித்து, ''படி, படி'' என எந்நேரமும் அவர்களை நிர்ப்பந்திக்கின்றனர்; படிக்காவிட்டால் தண்டனை வழங்குகின்றனர். இதே நிலை பள்ளிக்கூடத்திலும் நீடித்தால், ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை நம்பிக்கை நிறைந்த எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியுமா?

இம்மாவட்டத்துப் பாடசாலையொன்றில், ஆண்டு ஐந்திற் கற்கும் மாணவர்களை ''நான் விமானியானால்'' என்ற தலைப்பிற் கட்டுரை எழுதுமாறு

ஆசிரியர் கூறினார். பின்வாங்கிலிருந்த மாணவன் ஒருவன், ''முதலில என்ரை வீட்டுக்கும் அடுத்ததா என்ரை பள்ளிக் கூடத்துக்கும் பிளேனிலை வந்து குண்டு போடுவன்'' என எழுதியிருந்தான்! வீடும் பாடசாலையும் அவனுடைய மனதில் ஏற்படுத்திய தாக்கங்களின் யதார்த்த வெளிப்பாடு இது. அவை யிரண்டும், அவனுக்குப் பிடிக்காத இடங்களாக, சிறைக்கூடங்களாக அவனைப் பயமுறுத்தும் நிலையையே நாம் காண்கின்றோம். அவனை அனுதாபத்துடன் அணுகி, அவனுடைய பிரச்சனைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கா விட்டால், எதிர்காலத்தில் அவன் சமூக விரோதியாக மாறுவது தவிர்க்கமுடியாமற் போகலாம்.

சிறுவர்கள், விளையாடுவதில் நாட்டமுடையவர்கள். தாம் விரும்பிய விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்குப் போதிய அவகாசமும் வழிகாட்டலும் வழங்கப்படல் வேண்டும். விளையாட்டுக்களால், உடல், வளர்ச்சியும் உறுதியும் பெறுவதுடன், உள்ளத்திற் சாந்த விருத்தி ஏற்படவும் வழியுண்டாகின்றது. தமது சக்தியைத் திருப்தியான முறையிற் செலவிட்டுக் களிப்பையும் ஆத்ம திருப்தியையும் பெறுவதற்கும், அவர்களுக்கு விளையாட்டுக்கள் உதவுகின்றன.

மனித நாகரிக வளர்ச்சியில் அழகுக் கலைகளான இசை நாடகம், நாட்டியம், ஓவியம்

அடிக்காவிட்டாற் படிப்பிக்க முடியாது எனக்கூறும் ஆசிரியர்கள் சிலர் இன்றும் உளர்; அவர்களே இந்த உரைவீச்சின் இலக்கு; எய்பவர் உரும்பிராயைச் சேர்ந்த ''மேகதூதன்''.

# அன்பு வழி

சம்பள நாளின்
பௌர்ணமிகளே,
வகுப்பறையில் மட்டும் - ஏன்
ஒளி வீச மறுக்கிறீர்கள்?

பிரம்புகள் தான் - உமக்குப்
பெரும் புகழ் தந்திடுமோ?
அரும்புகள் தம்மை - ஏன்
கசக்கிப் பிழிகின்றீர்?

நாணவ மேகங்களின்
கண்ணீர் மழையால் தான்-
உங்கள் இதயப் பாறை
இன்பம் அடைகிறதோ?

அன்பு வழிதனிலே
அறிவைப் புகட்டிடுவீர்
காணாப் பெருமையெல்லாம் -
- அதனாற்
கண்டு மகிழ்ந்திடுவீர்?

— மேகதூதன்

போன்றவையும் இலக்கியமும் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. மனித வாழ்வுக்கு ஆதாரமான அன்பு, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, மகிழ்ச்சி, விட்டுக்கொடுத்தல் போன்றவை மேலோங்கவும், உளம் நலமடை



யவும் இக்கலைகள் இன்றியமையாதவை. இவற்றுள் ஒன்றிலோ பலவற்றிலோ மாணவர்களை ஈடுபடுத்துவது அவசியம்.

ஆசிரியர் என்ற பெருஞ் சேவையாளர், மாணவரது உள நிலையை நன்கு விளங்கிக் கொண்டு அன்பு காட்டி மகிழ்ச்சியாகக் கல்வி புகட்டுபவராகவும், பாடசாலையின் மூலம் தான் வளரலாம் என்ற நம்பிக்கையை மாணவருள்ளத்திலே பதியச் செய்பவராகவும் இருக்க வேண்டியது அவசியம். எதிர்காலக் குடிமக்களான இன்றைய மாணவர்கள் புத்தி பூர்வமான தீர்மானங்களையும் நுண்ணறிவு மிக்க தெரிவுகளையும் மேற்கொள்ள வேண்டியவர்கள். நாட்டின் அபிவிருத்தி இவற்றிலே தங்கியுள்ளது இவ்விஷயங்களில் மாணவர்கட்கு வழிகாட்ட வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களுடையது.

மாணவர்களின் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் தீர்த்து அவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கு உளவியலறிவு மிகவும் அவசியம். உளவியற் பரிமாணங்களில் முதன்மையானதும் அடிப்படையானதும் அன்பே. மனிதனுடைய உளவியற் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் உலகை மேன்மையடையச் செய்வதற்கும் அன்பு இன்றியமையாதது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பலவற்றைச் செய்த சாதனையாளர் லாப்லாஸ் என்ற விஞ்ஞானி மரணப் படுக்கையிற் கிடந்தபோது, அவருடைய மனத்தைச் சாந்தப்படுத்துவதற்காக, முன்னர் அவர் எழுதிய நூல்களையும் செய்த ஆராய்ச்சிகளையும் பற்றிப் புகழ்ந்து கூறிக் கொண்டிருந்தனர் அவருடைய நண்பர்கள், ''வாழ்க்கையில் இவைகள் முக்கியமல்ல'' என்றார் லாப்லாஸ். ''அப்படியானால் எதுதான் முக்கியம்?'' என்று நண்பர்கள் கேட்டார்கள். மிகவும் கஷ்டப்பட்டு, தன் சக்தி முழுவதையும் திரட்டி, ''அன்பு'' எனக்கூறித் தன் இறுதி மூச்சை விட்டார் அந்த அறிஞர். □

---

### பாடசாலைக் கல்வி

பாடசாலையை விட்டு ஒருவர் நீங்கிய பின்னரும், தொடர்ந்து கற்க வேண்டும் என்ற உந்துதலைப் பாடசாலைக் கல்வி அவருக்கு ஏற்படுத்தவில்லையெனில், பாடசாலை அவருக்கு எத்தகைய கல்வியையும் ஊட்டவில்லை என்றே சொல்லலாம்.

கு. நேசையா

நாட்டுப் பற்று, மொழிப்பற்று முதலியவற்றைப் போன்று பாடசாலைப் பற்றும் அவசியம். அந்தப் பற்று எத்தகைய சூழ்நிலையிலே உருவாகின்றது? தான்படிக்கும் பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களும் செய்யும் சேவையைக் குறித்துப் பெருமையடைகின்றார் ஒரு மாணவர்.

# முயன்றால் முடியும்

பு. நிருசன்

கோப்பாய் எனும் கிராமத்தில் ஆறு பரப்புக் காணியில் அமைந்துள்ள கோப்பாய் நாவலர் வித்தியாலயம், யாழ் மாவட்டத்திலுள்ள மூன்றாந்தரப் பாடசாலைகளுள் ஒன்று. ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு எட்டு வரையுள்ள இப்பாடசாலையில் எழுநூறு மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இங்கே போதிய ஆசிரியர்கள் இல்லை; தளபாடப் பற்றாக்குறை உண்டு; கட்டட வசதிகள் போதா. இருந்தும் எமது அதிபரினதும் இரண்டொரு ஆசிரியர்களினதும் முயற்சியால் நாம் எவ்வாறு முன்னேறி வருகின்றோம் என்பதை விளக்குவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

1992 ஆம் ஆண்டில் 15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு-உடற் பயிற்சிப் போட்டியில் நாம் கலந்துகொள்ளவேண்டும் என ஆசிரியர்கள் திரு. இ. மதியழகன், திரு. து. ஸ்ரீகரன் ஆகியோர் விரும்பினர். அதிபர் திரு. வை. குணசேகரம் முழு மனத்துடன் அனுமதி வழங்கித் தனது பூரணமான ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் நல்கினார்.

ஆறாம், ஏழாம், எட்டாம் ஆண்டுகளிற் கல்வி பயிலும் ஆண்களின் தொகை ஐம்பது மட்டுமே. வலது குறைந்தோர், முட்டு வருத்தமுடையோர் எனப் பத்துப் பேர் தவிர்க்கப்பட்டனர். அவர்களுள் நானும் ஒருவன். மீதி 40 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 35 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அதிகாலை 5.30 மணிக்குத் திரு. மதியழகன் திரு. ஸ்ரீகரன் ஆகியோர் அரைக்காற் சட்டையுடன் பிள்ளையார் கோவில் வீதிக்கு வந்துவிடுவார்கள்; விரைவில் மாணவர்களும் ஒன்று சேர்ந்துவிடுவர். ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்காகச் சுடுநீர்ப் போத்தலிற் தேநீர் கொண்டு அதிபரும் வந்துவிடுவார். பிள்ளையாரை நினைத்துக் கொண்டு வீதியைச் சுற்றி ஓடுவதுடன் பயிற்சி ஆரம்பமாகும். கடுமையான பயிற்சிதான் என்றாலும் மாணவர்கள் களைக்கவில்லை. ''இவர்களாவது, வெல்லுவதாவது'' என்ற வேறு பாடசாலை மாணவர்களின் கேலியையும் பொருட்படுத்தாது அனைவரும் உற்சாகமுடன் பயிற்சியில் ஈடுபட்டனர்.

15 நாட் பயிற்சியின் பின்னர், ஒரு சோதனை ஏற்பட்டுவிட்டது. அணியின் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டவன், நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றிற் சேர்ந்துவிட்டான். கொத்தணிப் போட்டிக்கு இன்னும் 10 நாள் மட்டுமே இருந்தன. ஆசிரியர்கள் செய்வதறியாது திகைத்தனர். ஆனால் அதிபர் கலங்கவில்லை. அந்த மாணவனை அழைத்துப் பலவித புத்திமதிகளைக் கூறினார். அவன் எதற்கும் செவிசாய்க்கவில்லை; அவனுடைய பெற்றோர் பல தடவை அலுவலகத்துக்கு வந்து போனார்கள்; நற்பலன் ஏதும் ஏற்படவில்லை.



திரு. மதியழகன், திரு. ஸ்ரீகரன் ஆகியோர் சோர்வடைந்து காணப்பட்டனர். அலுவலகத்திலிருந்து அதிபர் வெளியே வந்தார். மாணவர் மத்தியிற் பரபரப்பு ஏற்பட்டது.

''அணித் தலைவன் போனதற்காக நாங்கள் ஏன் கலங்க வேண்டும்? புதிய ஒரு தலைவனை உருவாக்க இந்த ஆசிரியர்களால் முடியும். ஒவ்வொருவரும் குரல் வளத்தைக் காட்டுங்கள்'' என்றார் அதிபர்.

அணியிலுள்ள மாணவர்களுடன், தட்டுப்பட்ட நாங்களும் சேர்ந்து ''லெவ்ற்-றைற் என மாறிமாறிக் குரல்கொடுத்தோம். அணியிலுள்ள இருவருடன் நானும் தெரிவு செய்யப்பட்டேன். ஆங்கில ஆசிரியை செல்வி ச. நடராசா குரற் பயிற்சி தந்தார். என்னுடைய குரல்தான் ஓரளவு பரவாயில்லை என அவர் கூறியது எனக்கு உற்சாகமளித்தது. நான் அணித் தலைவனானேன்.

உடற் பயிற்சியும் குரற் பயிற்சியும் தொடர்ந்தன.

கொத்தணிப் போட்டியில் வென்றோம். கோட்டப் போட்டியிற் கலந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து கடுமையான பயிற்சி. அதிபரின் மனைவி கடலை அவித்தும் தேநீர் தயாரித்தும் உதவினார். அதிபரின் செலவில் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத் தலைமயிர் வெட்டித் தடல்புடலான ஆயத்தங்கள். கோட்டப் போட்டியிலும் முதலாவது இடத்தைப் பெ

மாவட்டப் போட்டிக்கு முன்னர் தசைப் பயிற்சி அப்பியாசங்கள் செய்தோம். போட்டியில் முதலிடம் எமக்கே கிடைத்தது.

மூன்றாந்தரப் பாடசாலையொன்று பத்திரிகைச் செய்திகளில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. கல்வி அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்து விட்டது. பயிற்சியும் முயற்சியும், அதிபர், ஆசிரியர்களின் ஊக்கமும் உற்சாகமும் கடமையுணர்ச்சியுமே இதற்குரிய காரணங்களாகும். உடற்பயிற்சி ஆசிரியர் இல்லை; விளையாட்டு மைதானம் இல்லை; பணம் இல்லை - என இல்லைப் பாட்டுப் பாடிக்கொண்டிராமல், இருப்பதை வைத்துக்கொண்டு உருப்படியாக ஏதாவது செய்யவேண்டும் என்று துணிந்து முன்வந்த அதிபரையும் ஆசிரியர்களையும் மாணவர்களாகிய எம்மால் மறக்கவே முடியாது.

விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாமல், கல்வி, கலாசாரத் துறைகளிலும் நாம் முன்னணியில் இருக்கின்றோம். 1991 ஆம் ஆண்டிலே 11 மாணவர்களும், 1992 ஆம் ஆண்டில் 9 மாணவர்களும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்தனர். பண்ணிசைப் போட்டியில் ஆரம்ப பிரிவில் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றோம்.

"முயற்சி செய்தால் முடியாதது எதுவுமில்லை. உறுதியுடன் செயற்படுங்கள்; வெற்றி கிடைக்கும்" என எங்கள் அதிபர் திரு. குணசேகரம் அடிக்கடி கூறி எம்மை உற்சாகப்படுத்துவார். அவருக்கு உறுதுணையாக இருந்து எம்மை வளர்க்கிறார்கள் ஆசிரியர்கள்.

தொலைவிலுள்ள நகரப் பாடசாலைகளுக்குச் சென்று அலைக்கழியாமல், எமது கிராமத்தில், எமது வீட்டிற்கண்மையில் நாங்கள் படித்து முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும் அதிபரையும் ஆசிரியர்களையும் எமக்களித்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

---

## வேண்டும்!

தமிழீழ ஆசிரியருலகம் முழுவதும் " விளக்கு" ஒளியிற் பயன்பெற வழி செய்யப்படவேண்டும். ஆசிரியர்கள் எழுதிய கட்டுரைகள்- பிழைகள் இருந்தால், திருத்தப்பட்டு- வெளியிடப்படவேண்டும். நாம் ஆசிரிய எழுத்தாளர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்! புதிய ஆசிரிய எழுத்தாளர் பரம்பரையொன்றை " விளக்கு" உருவாக்கவேண்டும்.

செட்டியாமடம். - வசுந்தரா செல்லத்துரை

---

# வாத்தி (யார்)?

ஆழ்ந்த அறிவும் நல்லொழுக்கமுடையோரையே ஆசிரியர், ஆசார்ய, உபாத்தியாயர் என்ற சொற்கள் சுட்டுகின்றன.

இக்கருத்தை நன்கு உள்வாங்கி அதற்கு உரியவர்களாகத் தங்களை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பதை மறைமுகமாக அழுத்துகின்றார் நடேஸ்வராக் கல்லூரியின் பதில் அதிபராயிருந்து ஓய்வு பெற்றவரும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கில மொழிகளிற் புலமையுடையவருமான இக்கட்டுரையாளர்.

சு. து. சுந்தரமூர்த்தி ஐயர் B. A.

மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களை ஆசிரியர் என மதிப்புடன் கூறுகிறோம். "ஆசிரியர்" என்பவர் யார்? ஆசு + இரியர் ஆசிரியர் என ஆயிற்று. ஆசு என்பது குற்றம்; இரியர் என்பது நீக்குபவர். எனவே மாணவரின் குற்றம் களைபவர் ஆசிரியர் எனப் பொருள்படுகிறது. அப்படியாயின் மாணவர்கள் குற்றம் நிறைந்தவர்களா? எவ்வகையான குற்றம் நிறைந்தவர்கள்? என்ற ஐயப்பாடு நம் மனதில் உதிப்பது இயல்பு. மனதினால் வாக்கினால், உடலினால் பலவாறான குற்றம் புரிவது இயல்பு. தெரிந்தும் தெரியாமலும் இம் முக்கரணங்களாலும் குற்றம் புரியப்படுகிறது. ஆனால் மாணவர்களின் குற்றம் சற்று வேறுபட்டது: அறியவேண்டிய விடயங்களை உரிய முறையில் உரிய காலத்தில் அவர்கள் அறியாமல் இருப்பதே அவர்களிடம் காணப்படும் குற்றம். அதாவது மாணவர்களின் அறியாமையே அவர்களின் குற்றம். இக்குற்றத்தை அவர்பாலிருந்து களைவதே ஆசிரியரின் பணி; கடமை. இக் கைங்கரியத்தை உணர்வோடு, ஊக்கத்தோடு, செயற்படுத்துவதனால், சமூகம் "ஆசிரியர்" என்னும் மதிப்பு மிக்க சொல்லால் அப்பணியாளர்களைச் சுட்டுகின்றது; தொல்காப்பியர் ' ஆசான்" என்னும் தூய தமிழ்ச் சொல்லை உபயோகிக்கின்றார்.

"ஆசார்ய" என்ற வடமொழிச் சொல் கல்வி மேம்பாட்டினால் நல்லொழுக்கத்தைப் பேணி நிற்போரைக் குறிக்கின்றது. கல்விக்கும் நல்லொழுக்கத்துக்குமுள்ள நெருங்கிய தொடர்பை நாம் உணர்கின்றோம்.

கற்க கசடறக் கற்பவை
கற்ற பின்
நிற்க அதற்குத் தக

என்ற திருக்குறளும் இத்தொடர்பைத் தெளிவாக்குகின்றது.

''ஆசார்ய'' என்ற வடமொழிச் சொல்லிற்கும் ''ஆசிரியன்'' என்ற தூய தமிழ்ச் சொல்லிற்குமிடையே கருத்திலும் உச்சரிப்பிலும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுவது கவனிக்கத் தக்கது.

இத்தகைய நற்பணியில் ஈடுபட்டுள்ளோரைச் சிலர் 'வாத்தி'' எனும் சொல்லாற் தாழ்த்திக் கூறிவருவதையும் நாம் காண்கின்றோம். ஆனால் வாத்தி என்பதன் மூல உருவத்தையும் சரியான கருத்தையும் ஆராய்ந்தால், அச்சொல்லும் உயர்ந்த பொருளைத் தருவதை அறியலாம்.

வாத்தி என்பது வாத்தியார் என்ற மதிப்பிற்குரிய சொல்லின் பகுதியாகும். வாத்தியுடன் இணைந்த ''யார்'' மரியாதைப் பண்பைக் காட்டுகின்றது; மரியாதைக்குரியவர் ஆசிரியர் என்ற எண்ணக்கரு அதிற் பொதிந்துள்ளது. உண்மையில் ''உபாத்தியாயர்'' என்ற வடமொழிச் சொல்லின் திரிபே வாத்தியார் என்ற சொல்.

சமஸ்கிருத மொழியிலுள்ள "உபாத்யாய'' என்ற பதம் ஈற்று ''ய''கரம் மறைந்து ''ர்'' விகுதி சேர்ந்து நிற்பதே ''உபாத்தியார்'' என்ற தமிழ்ச் சொல் உபாத்தியாய என்ற சொல்லை உப + அத்யாய என வகுக்கலாம். உப என்பது முற்சேர்க்கை (Prefix) இது உபசர்க்கம் என்று சொல்லப்படும். இதன் பொருள் ''உடன்'' என்பது ''அத்யாய''- கற்பிப்பவர் என்னும் பொருளுடையது. எனவே, உபாத்யாய என்ற முழுவடிவம் உடனிருந்து. அஃதாவது மாணவருடன் இருந்து கற்பிப்பவர் என்ற பொருளுடையது. வேதம் கற்பதற்கு ஆசிரியரும் மாணவரும் ஒருங்கிணைந்தே செயற்பட வேண்டும். ஆசிரியர் சுரம் வழுவாது, உச்சரிப்புத் தவறாது வேதங்களை ஓத மாணவன் அவரின் முன்னிலையில் உடனிருந்து கேட்டு அப்படியே பாடம் கற்றல் வேதகாலத்திலிருந்து வந்த குருகுலக் கற்றல் முறையாகும். இவ்வாறு வழிவழியாக வந்த கற்றற் செயற்பாட்டால் உயர்வான இடத்தை வகித்த ஆசிரியரை உலகம் ''உபாத்யாய'' என்று பண்பாக அழைக்கத் தலைப்பட்டது.

இன்றும் பாடசாலைகளில் ஆசிரியரும் மாணவரும் ஒருங்கிசைந்து செயற்படும கற்றல் முறையை நாம் காண்கின்றோம். ஆசானிடம் மாணவன் கற்றற்குரிய முறை பற்றித் தொல்காப்பியம் கூறியதற்கும் வேதகாலக் கற்றல் முறைக்குமிடையே ஒற்றுமை காணப்படுகின்றது.

''உபாத்யாய'' ''மகோபாத்யாய,'' மகாமகோபாத்



யாய'' என்ற பட்டங்களும். வழக்கில் உள்ளன. இவைகல்விமான்களின் படித்தரங்களை மனதிற் கொண்டு. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் உன்னத பட்டங்களாகும், மகாமகோபாத்யாய கலாநிதி உ. வே. சாமிநாதையர் என்னும் பட்டப் பெயர் சூட்டப்பட்ட மகானைத் தமிழ் உலகம் நன்கு அறியும். கேரளாவில் உபாத்யாய, மகோபாத்யாய என்ற பட்டங்கள் கல்வித்தரத்திற்கேற்ப பரீட்சை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்வியும், ஒழுக்கமும் நிறைந்த பெரியோர்களை ''உபாத்தியாய'' ஆசான், ''மகோபாத்யாய,'' 'மகாமகோபாத்யாய,' ஆசிரியர் என்னும் புனிதசொற்களாற் சிறப்பித்து அழைப்பது நம் சமுதாயத்தின் உயர்ந்த பண்பாட்டைக் குறிக்கின்றது.

ஆனால், ''Teaching is a noble Profession' என உயர்வாகச் சொல்லும் இன்றைய உலகம் ''Teachers are noble Professors' என்பதை உணர மறுப்பது வருத்தத்திற்குரியது. தொழிலுக்குக் கொடுக்கும் மதிப்பை, அத்தொழிலைப் புரிபவருக்குக் கொடுக்க மறுப்பது ஏனோ!

**ஏறத்தாழ — இட்டத்தட்ட**

கிட்டத் தட்ட, ஏறத்தாழ (ஏறக்குறைய) - என்பன ஒரே கருத்துடையன எனப் பலர் கருதுகிறார்கள். இது தவறானது. ''இன்று நடைபெற்ற கூட்டத்திற்குக் கிட்டத்தட்ட நாற்பது பேர் வந்தார்கள்'' என்று சொல்லும்போது நாற்பதுக்குச் சிறிது குறைவான தொகையினர் வந்தனர் என்பதையே அது குறிக்கின்றது. '' ஏறத்தாழ நாற்பது பேர் வந்தனர்'' என்பதில், வந்தவர்களின் தொகை நாற்பதுக்குச் சிறிது கூடுதலாகவும் இருக்கலாம். அல்லது சிறிது குறைவாகவும் இருக்கலாம்.

- க. வை. கு.

# ஆசிரியர்

*திருமணத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில் எங்கிருந்தோ வந்த மொட்டைக் கடிதம் எல்லாவற்றையும் குழப்பிவிடுகின்றது. பெண்ணும் தந்தையும் குழம்புகின்றனர். அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு உருகுகின்றார் ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்வரத்தினம். அவரால் நிலைமையைச் சீராக்க முடிந்ததா? எப்படி?*

**சொக்கன்**

செல்வரத்தினத்திற்கு அந்தக் கிராமம் புதியதல்ல. சரியாக நாற்பது ஆண்டுகளை அவர் அதன் புழுதியிலும், மண்ணிலுந்தான் கழித்து விட்டிருந்தார். புதிதாக அங்கு ''பஸ்'' சேவை ஏற்பட்ட பொழுது பஸ்ஸிலே ஏறிய முதற் பிரயாணி அவர். உபதபாற்கந்தோரில் முதல் 'காட்' வாங்கிக் கால்கோள் விழா நடத்தி வைத்த பிரமுகரும் செல்வரத்தினந்தான். பத்துமைலுக்கு அப்பால் இருந்த இளம் மனைவிக்கு எழுதிய முதலுங் கடைசியுமான 'காட்' அது! அதன் பெறுமதியே தனிதான்.

அவருடைய கம்பீரமான ஒலியை மிரட்சி கலந்த மதிப்போடு கேட்ட மூன்று தலைமுறைகள் அங்கிருந்தன. புடைவை வியாபாரி பரமலிங்கம் தொடக்கம், சமீபத்தில் 'டாக்டர் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறிய சிவஞானம் வரை எல்லோருமே அவரிடம் மூக்கை உறிஞ்சி அரிச்சுவடி படித்தவர்கள்தாம். செல்வரத்தினத்தின் பிரம்பு பட்ட தழும்புகள் மறைந்திருக்கலாம். ஆனால் அவரின் அறவுரைகளும் அறிவுரைகளும் என்றைக்கும் மறையப் போவதில்லை.

அவர் ஏணிபோல் இருந்தார். அந்த ஏணியைத் துணைகொண்டு ஏறியவர்கள் மேலே, மேலே போய்விட்டார்கள். அவரோ 'எல்லையறு பரம்பொருள்' போல் இருந்தபடியே இருந்தார். ஆசிரியப் பயிற்சி கூடப் பெறாத சாதாரண தமிழ் ஆசிரியராகவே செல்வரத்தினம் இளைப்பாறினார். இப்பொழுது அவருக்கு முப்பதோ, நாற்பதோ, உபகாரச்சம்பளமாக வந்துகொண்டிருக்கிறது.

செல்வரத்தினத்திற்குப் பிள்ளை குட்டி என்ற பிக்கல் பிடுங்கல் எதுவுமில்லை. மனைவியும் சில ஆண்டுகளுக்கு முன்பு போய்விடத் தனிக்கட்டையாகத்தான் அவர் வாழ்ந்து வந்தார். அவருடைய தங்கையின் மகன் முப்பது ரூபா வாங்கிக்கொண்டு நேரத்திற்குச் சோறுபோட்டு வருகிறான். மிச்சம் மீதியும் அவனது பிள்ளைகளுக்கே செலவாகி விடும்.

ஆனால், செல்வரத்தினம் எதைப்பற்றியும் கவலைப்பட்டவர் அல்லர். ஆடலே புரியும் அம்பலவாணர் அவரவர்க்கமைத்தனவே கிடைக்கும் அல்லாது, அதிக ஆசைப்படுவது தவறு என்பது அவரின் சித்தாந்தம். வயது அறுபதைத் தாண்டியிருந்தும், கம்பீரம் குறையாத ஆஜானுபாகுவாய், சிரித்த முகத்தோடு அவர் இருப்பதைப் பார்க்க ஆச்சரியம் உண்டாக வேண்டியதில்லை அவரைப் போன்றவர்கள் அப்படித்தான் இருப்பார்கள்.

இன்று செல்வரத்தினம் தமது மாணவன் ஒருவனின் அழைப்பின் பேரில் அவனுடைய மகளின் கலியாணத்திற்காய் அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தார்.

செல்வரத்தின் வருகையால் விவாக வீடே அமர்க்களப்பட்டது. அவரைக் காண வேண்டும் என்றே அவருடைய மாணவபரம்பரை அங்கும் படையெடுத்திருந்தது. அவர்களில் ஐம்பதைக் கடந்த கிழங்களும் இருந்தார்கள். பூனைமீசை அரும்பிய கிழங்களும் இருந்தார்கள்.

அவர்களைத் தனித்தனி பெயர் சொல்லி அழைத்து அவர்கள் பாடசாலையிலே செய்த குறும்புகளையும், அவர்களின் குறைநிறைகளையும், பட்ட அடி உதைகளையும் எடுத்துச் சொல்லி மகிழ்வித்துக் கொண்டிருந்தார் செல்வரத்தினம்.

அவருடைய கூர்மை மழுங்காத நினைவாற்றல் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. வயதைப் புறமுதுகிடச் செய்து கலகலப்போடு. குண்டுக் கல்லாய் இருக்கும் அவரின் ஆரோக்கிய நிலை பொறாமையை ஏற்படுத்தியது.

அவர் என்ன செய்வார்? பரீட்சைத்தாள்களுக்கும், பாடப் புத்தகங்களுக்கும் பலியாகாமல் நிம்மதியாக இருந்தது அவர் குற்றம் அல்லவே!

விவாக ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. வாழை கட்டுபவர்களும், அலங்காரங்கள் செய்பவர்களும் அங்கும் இங்கும் ஓடி ஆடி வேலை செய்துகொண்டிருந்தனர். இரவு பத்து மணிக்கு முகூர்த்தம்.

அதுவரை வீட்டிற்குள் அடைந்து கிடக்க விரும்பாதவராய்ச் செல்வரத்தினம் வெளியே புறப்பட்டார். அவருடைய மாணவர் குழாம் அவருடன் சிறிதுதூரம் வந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து விட்டது. செல்வரத்தினம் தனியாக அந்தக் கிராமத்தையே சுற்றி வந்தார். அவர் கற்பித்த பாடசாலை...

ஓலைக்கீற்றுக் கொட்டகையாய் இருந்த அது. இன்று புதிய ஓட்டுக் கட்டடம் பெற்றுத் தலை நிமிர்ந்து நின்றது. சூழவரப் பொட்டற்காடாகக் கிடந்த இடங்களில், வழுக்கைத் தலையில் மயிர் முளைத்தது போலச் சிறுசிறு வீடுகள் எழுந்திருந்தன.

அவர் வழக்கமாக அமர்ந்திருந்து இலக்கியம் கற்பிக்கும் மகிழமரம் அவரைக் கண்டதும் முறுவலிப்பதுபோலக் காற்றில் அசைந்து பூக்களாய்ச் சொரிந்தது. பழைய நினைவுகள் படையெடுத்தன. இந்த மரத்திற்குக் கீழேதான் சங்கரன் தன் இனிமையான குரலிலே சந்திரமதி புலம்பலை முகாரிராகத்தில் படித்தான்; சம்பந்தன் முன்னால் இருந்த பையனுக்கு வாழைநாரால் வால் கட்டியதற்கு, அடிவாங்கியதும் இந்த மகிழின் கீழேதான்.

செல்வரத்தினம் அந்த மகிழின் கீழ் அமர்ந்திருந்து பழைய நினைவுகளை அசைபோட்டார். ஆஹா! எவ்வளவு இனிய நாள்கள் அவை? நாற்பது வருடங்களில் நாற்பது நாள்கள்கூட லீவு எடுக்காது, பாடசாலையும் தாமுமாய் அத்துவிதமாகிப் போன காலங்களை அவரால் எப்படி மறக்கமுடியும்?

உலகத்திலே உயர்ந்த தொழில் ஆசிரியத் தொழில்தான் என்று நினைத்துத் தலை நிமிர்ந்து நடந்த நாள்கள், வாழ்க்கையின் பொற்காலம் என்பதை அவரால் உணராதிருக்கக் கூடவில்லை. அந்த உணர்வில் அவர் கனிந்து கரைந்து போனது போலக் கண்களிலே நீர் முட்டிப்போய் நின்றது.

“பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போயினவே” என்று எண்ணியவராய் நெடுமூச்சை உதிர்த்தபடி எழுந்து நடந்தார்.

செல்வரத்தினம் விவாக வீட்டிற்குத் திரும்பிய பொழுது அங்கே சாக்களை குடிகொண்டிருந்தது. பழைய கலகலப்பைக் காணமுடியவில்லை வாழைமரங்களிற் சில கட்டியபடி நின்று சோர்ந்தன; சில கட்டப்படாமலே கீழே கிடந்தன. அரைகுறை அலங்காரங்கள் அப்படி அப்படியே கிடந்தன.

வீட்டுக்காரர் மாத்திரம் முன்னால் இருந்த சாய்மனைக் கதிரை ஒன்றிலே சாய்ந்து, கூரையைப் பார்த்தபடி இருந்தார். வேறு ஒருவருமே அங்கில்லை.

வீட்டினுள்ளே இருந்து மெல்லிய விசும்பல் ஒலி சற்றைக்கொருதரம வந்து கொண்டிருந்தது. அந்த விசும்பல் ஒலி, தம்மிடம் ஐந்தாம் வகுப்பிலே கற்ற பூமணியிடமிருந்துதான் வருகிறது என்பதைச் செல்வரத்தினம் கேட்டது மூலமே அறிந்துகொண்டார் மூக்கை உறிஞ்சி உறிஞ்சி, இடை இடையே கேருகிற குரலில் அழுவதற்குப் பூமணியால்தான் முடியும்... அவள்தான் மணமகள் ... ஏன் அழுகிறாள்?



செல்வரத்தினத்தைக் கண்டதும் வீட்டுக்காரராகிய பொன்னுத்துரை எழுந்து நின்றார் எழுந்ததுமே மேல் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கி விட்டார்.

செல்வரத்தினம் அவரின் தோள்களிலே ஆதரவோடு கைகளை வைத்து, என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

பொன்னுத்துரை பதில் கொடுக்கவில்லை. மௌனமாகத் தமது மடியிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு, மீண்டும் அழுதார்.

செல்வரத்தினம் கடிதத்தை வாசித்தார் கடிதம் மணமகன் வீட்டிலிருந்து வந்தது. அதில், பூமணி யாரையோ காதலித்ததாகவும், காதலித்தவனோடு ஓடிப்போக எண்ணியிருந்ததாகவும், அறிய வருவதால் இந்தத் திருமணத்திற்குத் தங்களால் இணங்க முடியாது என்று கண்டிருந்தது. குறித்த செய்தியை அறிவிக்கும் மொட்டைக் கடிதம் ஒன்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்தது. “ உண்மை விளம்பி” அதனை எழுதியிருந்தான்.

செல்வரத்தினம் அந்த மொட்டைக் கடிதத்தை வாசித்தார். திரும்பத் திரும்ப வாசித்தார் .. அவர் முகம் மலர்ச்சியடைந்தது.

அந்தக் கடிதத்தோடு விரைவாக அவர் வெளியே சென்றதைப் பார்க்கப் பொன்னுத்துரைக்கு ஆச்சரியமாக இருந்தது.

பொன்னுத்துரை பின்னால் செல்ல முயல, செல்வரத்தினம் அவரைத் தடுத்துவிட்டுத் தாம் மாத்திரம் சென்றார்.

செல்வரத்தினம் ஓட்டமும் நடையுமாக நடந்து சென்று, அரைமைல் தூரத்திலிருந்த ஒரு வீட்டின் கதவைப் படீரென்று திறந்து கொண்டு உள்ளே சென்றார். “ திருநாவுக்கரசு” என்று அவர் போட்ட சத்தத்தில் பழைய அதிகார மிடுக்குச் சற்றுங் குறையாமல் இருந்தது. திருநாவுக்கரசு பீதிப் புன்னகையோடு வந்து தமது முன்னாள் ஆசிரியர் முன் நின்றார்.

“ இந்த மொட்டைக் கடிதத்தால் நீ என்ன சுகம் கண்டாய்? அநாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்குவதிலே உனக்கு என்ன லாபம்? என்னிடம் படித்ததற்கு இதுதானா பயன்?” என்று அவர் இரைய இரைய, நாற்பது வயதைக் கடந்து சற்றே நரைவிழத் தொடங்கியிருந்த திருநாவுக்கரசிற்குக் கண்கள் இருண்டுவந்தன.

“ நான் நான் .. இதை எழுதவில்லை” பழைய மாணவன் நடுக்கத்தோடு இந்தச் சொற்களை உதிர்க்க அவர் பட்டபாடு கொஞ்சமல்ல.

திருநாவுக்கரசு சொல்லி முடிக்கவில்லை செல்வரத்தினம் எரிமலையாய்க் கனன்றார். "முட்டாள் என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்? இந்தக் கடிதத்தைப் பார்". செல்வரத்தினம் கடிதத்தைக் காட்டினார்.

அன்பார்ந்த சுந்தரலிங்கம் அவர்களுக்கு,

உங்கள் மகனுக்கு, பொன்னுத்துரையின் மகள் பூமணியை விவாகஞ் செய்விக்க எண்ணியிருப்பதாய் அறிந்தேன், அதற்கு ஒரு தடையுண்டு. பூமணி கெட்டழிந்த பெண். அவளிற்கு ஒரு காதலன் இருக்கிறான். அவனோடு ஓடிப்போகக் கூட இந்தப் பெண் நினைத்திருந்தாள். ... உங்கள் நன்மைக்காகவே இந்தப் பயங்கர உண்மையை வெளியிடுகிறேன். இதற்கு ஆதாரங்கள் உண்டு.

இங்ஙனம்
**உண்மை விளம்பி.**

" அதற்க்கு, இதற்க்கு, அவளிற்க்கு என்று எழுதாதே. அதற்கு, இதற்கு, அவளுக்கு என்று எழுது என்று எத்தனைநாள் சொல்லியிருப்பேன்? எத்தனை அடிகளை வாங்கியிருப்பாய்...... திருநாவுக்கரசு, எழுதியதைத் தான் வேறுயாரைக்கொண்டோ எழுதுவித்தாய். ஆனால், ஈயடிச்சான் காப்பி அடிப்பவனையல்லவா பார்த்துப் பிடித்தாய், முட்டாள்!" செல்வரத்தினம் சிரித்தார். திரிபுராந்தகச் சிரிப்பு அது! காலத்தால் தேயாத அந்தச் சிரிப்பு திருநாவுக்கரசை ஏழு வயதுப் பையனாக ஆக்கி ஆசிரியரின் காலடியில் விழ வைத்தது.

"மன்னித்துக் கொள்ளுங்கள் வாத்தியார். பொன்னுத்துரையின் மகளுக்குப் பேசிய, பொடியனைத் தான் முதலிலே என் மகளுக்குப் பேசியிருந்தேன். சீதன விஷயத்தால் அது குழம்பிப் போய்விட்டது. அவனைப் பொன்னுத்துரை தன் மகளுக்கு மாப்பிள்ளையாக்க நினைத்தது பொறாமையைத் தந்தது. அதனால் தான்... என்னை மன்னியுங்கள்!" திருநாவுக்கரசு அழாத குறையாக மன்றாடினார்.

" மன்னிக்க என்ன இருக்கிறது? இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் விஷயத்தை மாப்பிள்ளை வீட்டாருக்கு விளங்கப்படுத்து. பொன்னுத்துரையின் இருண்டு விட்ட வீட்டிலே விளக்கேற்றி வை; போ."

திருநாவுக்கரசு மறு பேச்சின்றித் தோளிலே துண்டைப் போட்டுக்கொண்டு, மாப்பிள்ளை வீட்டிற்குப் பயணமானார்.

# விளக்கு

பங்-சித் -1994

## உள்ளே உள்ளவை


கற்றுக்கொண்டே இருப்போம் — ஆசிரியத் தலையங்கம்

சாரணீய உயர் பயிற்சி

சேவை நலம்

ஆசிரியமும் வாண்மையும் — அ. சந்திரகுமார்

விகிதம் — சு. இராஜநாயகம்

பாடசாலைக் கட்டமைப்பில் — அநு. வை. நாகராஜன்

விளக்கு வெளிச்சத்தில்

உள்ளம் கலந்த நல்வாழ்த்துக்கள்

ஆரம்பக் கல்வி — செ.க. துரைரத்தினம்

அன்புடன் செயற்படுவோம் — பா. தனபாலன்

அன்பு வழி — மேசதூதன்

முயன்றால் முடியும் — பு. நிருசன்

வாத்தி (யார்)? — சு.து. சுந்தரமூர்த்தி ஐயர்

ஆசிரியர் — சொக்கன்


---


யாழ்- மகேந்திரா வீதி, தாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஆசிரிய வாண்மை விருத்திக் குழுவினால் வெளியிடப்பட்டது.

ஆசிரியர்: சி. சிவசரவணபவன், துணையாசிரியர்: க. வை. தனேஸ்வரன்

அலுவலகம்: 689, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.